பல்சுவை

தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com ஜூன் 2017

ஹைக்கூ நூற்றாண்டு சிறப்பிதழ்

•

யதார்த்த வாழ்வின் திராணியை
விளக்குகின்றன ...
மிதக்கும் தக்கைகள் !

•

மெத்தனப் போக்கில்
நங்கூரமிடுகின்றன ...
சோம்பலும் தள்ளிப்போடலும் !

•

ஜன்னல் கதவுகளைத்
திறந்து வையுங்கள்...
அடுத்தவர் துன்பம் அறிய !

•

பொய்மையும் புறங்கூறலும்
ஒட்டுண்ணிகளாய் வளரும்....
சுயநல மனங்களில் !

•

அடுத்தவர் குற்றங்களையே
முன்னெடுத்து பேசுவோர்...
தன்குற்றம் அறியாதவர் !

•

எதுவுமே நம்முடன் வந்ததில்லை
ஏனிந்தப் பேராசை ?
நீர்க்குமிழி வாழ்க்கை !

•

சமதர்மச் சமுதாயம் மலர
என்றும் இணைந்திருக்க வேண்டும்...
மனிதநேயக் கரங்கள் !

கா.ந.கல்யாணசுந்தரம்

•

இரண்டு கோப்பை தேநீர்
எப்படி ஆற்றுவேன்
அவள் வராத சோகத்தை.

•

கோடை கால பூ
வற்றி இருக்குமோ
தேன்.

•

பறக்கும் கொக்கு
வால் ஆட்டுகிறது
அலகில் உள்ள மீன்.

•

சுத்தமே சுகாதாரம்
எழுதியிருந்தது
குப்பை அகற்றா தொட்டி மீது

•

வானில் புறா
தரையில் பறக்கும்
நிழல்.

•

குடிகாரனுக்கு வாக்கப்பட்டவள்
விளக்கேற்றினாள்
மது புட்டியில்

•

சிப்பி
முத்தாகிப்போனது
சிறுமிக்கு

அரவிந்தன், சென்னை 39

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை

தமிழ்நெஞ்சம்

தோற்றம் 1972

ஜூன் 2017

ஆசிரியர் / வெளியிடுபவர் :
அமின் மொஹமெட்

இணையாசிரியர் :
சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :
ஹிப்ஸுர் ரஹ்மான்
“காகிதம்” மனோபாரதி
சத்தியபாமா சந்திரன்
அழகுநிலா
சு.பீர்முகமது
ஓவியக்கவிஞர் உமாபதி
“நம் குடும்பம்” ஆ. வர்க்கீஸ்
நெல்லை உலகம்மாள்
வசந்தி ஆதித்தன்
கவிஞர் அ.முத்துசாமி
கவிஞர் ஈழபாரதி
கவிதாயினி செந்தாமரைக்கொடி
கவிஞர் கலந்தர் பூமதீன்
கவிஞர் பாலமுனை பாறூக்

ஆலோசகர்கள் :
“பைந்தமிழரசு” பாவலர் மா. வரதராசன்
கவிதாயினி சக்தி ஜோதி
கவிதாயினி அமுதா பொற்கொடி

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் அனுப்ப அஞ்சல் தொடர்புகளுக்கு ...

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

TAMILNENJAM
59, rue des Entrechats
95800 Cergy - France

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனத்துக்கு, நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும்.

படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

எமது புதிய வெளியீடுகள்

ஹைக்கூ கற்க ...

ஹைக்கூ - சொல் விளக்கம்:

'ஹை' என்பதற்கு ஜப்பானிய அடிச் சொல்லுக்கு அணுத்தூசி, கரு, முழுமையான கரு என்ற பொருள் உண்டு. 'கூ'என்பது சொற்றொடர், வெளிப்பாடு, வாக்கியம், பகுதி, ஒரு வரி, ஓர் அடி, ஒரு செய்யுள், ஒரு கவிதை என்றும் பொருள் தருகிறது ஜப்பானிய அகராதி. (நிர்மலா சுரேஷ், ஹைக்கூக் கவிதைகள் ஆய்வு நூல், ப.15.) இவற்றை இணைத்துப் பார்க்கையில் ஹைக்கூ என்பது கரு போன்றும், உயிரணு போன்றும் உருவானதொரு கவிதை என்னும் முழுப்பொருளைத் தரும். மேலும் வளர்ச்சிக்கும் விரிவுக்கும், ஒரு கருவுக்கு உள்ளிருக்கும் இன்னொரு கவிதைக் கருவைக் காண்பதற்கும் ஹைக்கூ என்ற சொல் சிறப்பாக அமைந்திருப்பதைக் காணலாம்.

ஆரம்பக் காலத்தில் ஹைக்கூ கவிதை ஹொக்கூ என்றே அழைக்கப்பட்டது. பிறகு ஹைகை என்று திரிந்து ஹைக்கூ என்றாயிற்று. 'Haiku' என்ற சொல்லுக்கு இணையாகத் தமிழில் ஹைகூ, ஹைக்கூ, ஹைய்கு, ஹொக்கு, அய்க்கூ, ஐக்கூ என்ற சொல்லாட்சிகளும், அதன் வடிவத்தைச் சுட்டும் வண்ணம் துளிப்பா, குறும்பா, சிந்தர், கரந்தடி, விடுநிலைப்பா, மின்பா, அகத்தியக் கவிதை, கடுகுக் கவிதை, குட்டைக் கவிதை, குறுங்கவிதை, நறுக் கவிதை, மத்தாப்பூக் கவிதை, மின்மினிக் கவிதை, வாமனக் கவிதை முதலான பெயர்களாலும் அடையாளப்படுத்தப்படுகிறது. இன்று ஹைக்கூ என்ற சொல்லாட்சியே தமிழ் இலக்கிய உலகில் இடம்பெற்றுள்ளது.

ஹைக்கூ வாசிப்பு முறை:

ஹைக்கூவை முறையாக எப்படி வாசிக்க வேண்டும் என்ற புரிதல் ஹைக்கூ எழுதுபவர்களுக்குக் கூடத் தெரியாமல் இருப்பது வினோதமானது. 3 அடிகள் கொண்ட ஹைக்கூவை முதல் இரண்டு அடிகளைத் தொடர்ந்து படித்து நிறுத்த வேண்டும் (மூன்றாவது அடியைப் படிக்கக் கூடாது). மூன்றாவது அடி என்ன சொல்லவரும் என்று சிந்தனையில் மூழ்க வேண்டும்... மீண்டும் முதல் இரண்டு அடிகளைப் படித்து நிறுத்தி மூன்றாவது அடியைப் படிக்க வேண்டும். அப்படிப் படிக்கும் போது அந்த இறுதி அடி நாம் சிந்தித்த கருத்தைப் பிரதிபலிக்காது எதிர்பாராத திருப்பம் கொண்டதாக இருக்க வேண்டும்.

ஹைக்கூவும் வாசகனும்:

ஹைக்கூ ஒரு காட்சியைக் காட்டுகிறது. அதைப்பற்றிச் சொல்வதில்லை. அதன் விளைவான உணர்ச்சிகளையும் சொல்வதில்லை, படிப்பவரின் கற்பனைக்கே அவைகளை விட்டுவிடுகின்றது.

எழுதும்போது கவிஞனுக்கும் கருப்பொருளுக்கும் ஒரு சிறு இடைவெளிகூட இல்லாமல் எண்ணங்களைக் கலையவிடாமல் நேரடியாகச் சொல்லும்போது கவிஞனின் உணர்வுக்கும், வாசகனின் மனதிற்கும் கவிதை ஒரு பாலமாக அமைந்து நேரடித் தொடர்பை உண்டாக்கிவிடுகிறது.

கவிஞனின் எண்ணம் முழுவதையும் ஹைக்கூ வெளிப்படுத்துவதில்லை, ஹைக்கூ கவிதைகளைப் புரிந்துகொள்வதில் வாசகனுக்கு மிகப்பெரிய பங்குண்டு 'ஹைக்கூ ஒரு பொருளை சுட்டிக் காட்டுவதோடு நின்றுவிடும், வாசகனே அதில் மறைந்திருக்கும் உணர்ச்சிகளைத் தேடித் துருவி கண்டுபிடித்துச் சுவைக்க வேண்டும்.

மேலும், ஈரோடு தமிழன்பன் அவர்கள் 'ஹைக்கூ முழுமையானதாகவோ, தெளிவான கருத்துத் தெறிப்புடனோ இருந்தாக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வாசகன் தனது கைவசம் கொஞ்சம் வார்த்தைகளை வைத்துக் கொண்டு ஹைக்கூவைப் படிக்க வேண்டும். அவை தேவைப்படலாம். அவன், தனது அனுபவங்களையும், அனுமானங்களையும், கற்பனைகளையும் எடுத்துக் கொண்டு சென்றால், தானும் படைப்பாளியோடு ஒரு பங்குதாரராகிப் பயனை இதயக்களத்தில் வரவு வைக்கலாம். வாசகனும் கவிஞனோடு சேர்ந்து ஹைக்கூவை மணந்துகொண்டு அவனுக்கு ஒரு விதத்தில் சகலையாகி விடுவதைத் தவிர வேறு வழியில்லை' (தமிழன்பன், சூரியப் பிறைகள், ப.10.) என்று குறிப்பிடுவதிலிருந்தும் ஹைக்கூ கவிதையைப் புரிந்து பொருள் கொள்வதில் வாசகன் எந்த அளவுக்கு இன்றியமையாதவனாக விளங்குகின்றான் என்பதை உணரலாம்.

ஹைக்கூவில், நாம் காட்டும் காட்சி அல்லது நிகழ்ச்சி இயற்கையைப் பற்றி, மனிதனைப் பற்றி, வாழ்க்கையைப் பற்றி ஓர் அரிய உண்மையை உணர்த்துவதாக, வாசகன் உள்ளத்தில் ஒளியேற்றுவதாக இருக்க வேண்டும். அப்படி இல்லையென்றால் ஹைக்கூ எழுத வேண்டிய அவசியமில்லை (அப்துல் ரகுமான், சோதிமிகு நவகவிதை, ப.44.) என்பார் அப்துல் ரகுமான்.

ஹைக்கூவின் மரபு குறித்த கவிக்கோ அப்துல் ரகுமான் கூற்று
ஹைக்கூவில் நாம் கடைபிடிக்க வேண்டிய மூன்று முக்கிய மரபுகள் உண்டு.

1. ஹைக்கூவில் முதல் இரண்டடி ஒரு கூறு. ஈற்றடி ஒரு கூறு. ஹைக்கூவின் அழகும் ஆற்றலும் ஈற்றடியில்தான் உள்ளது. ஈற்றடி ஒரு திடீர் வெளிப்பாட்டை, உணர்வு அதிர்ச்சியை ஏற்படுத்தி முழுக் கவிதையையும் வெளிச்சப்படுத்த வேண்டும்.

2. மற்றொரு மரபு ஹைக்கூவின் மொழி அமைப்பு. ஹைக்கூவின் மொழி ஊழல் சதையற்றமொழி. தந்தி மொழியைப்போல், அவசியமற்ற இணைப்புச் சொற்களை விட்டு விட வேண்டும்.

3. உயிர் நாடியான ஈற்றடியில் ஆற்றல் மிக்க வெளிப்பாட்டிற்காகப் பெயர்ச் சொல்லையே பயன்படுத்த வேண்டும். (அப்துல் ரகுமான், சோதிமிகு நவகவிதை, ப.44.)

ஹைக்கூவுக்குத் தலைப்பிட்டு எழுதக் கூடாது. ஒரு ஹைக்கூவிற்கு இரண்டுக்கு மேற்பட்ட அல்லது குறைந்த பட்சம் இரண்டு உட்கருத்தாவது (குறியீடு போல; உட்பொருள்) இருக்க வேண்டும். ஹைக்கூவுக்குத் தலைப்பிடக் கூடாது என்பதற்கான காரணம் இதுதான்: தலைப்பைத் தாண்டிச் சிந்திப்பதைத் தடை செய்கிறது. ஒரு ஹைக்கூவின் உட்பொருள் (குறியீடு போல்) விரிந்து செல்வதாக அமைய வேண்டும். தமிழ்நாட்டு ஹைக்கூக்கள் பெரும்பான்மையும் ஒற்றைப் பரிமாணத்தில்தான் வருகின்றன எனத் தன் வருத்தத்தைப் பதிவுசெய்வார் கோவை ஞானி. ஓர் உண்மையான ஹைக்கூ குறைந்தபட்சம் இரண்டு உட்பொருளையாவது தாங்கி நிற்பது சிறப்பு.

மேற்கண்டவற்றை ஹைக்கூப் படைப்பாளர்கள் கடைபிடிக்க வேண்டும். ஏனென்றால் ஹைக்கூவின் அடையாளமும், அழகும், ஆற்றலும் இவற்றில்தான் இருக்கின்றன என்றால் மிகையாகாது.

அழகை
விலக்கிப் பார்க்கிறது
காமம்

மரத்தை வெட்டி
பந்தல் போட்டான்
அனல் காற்று

ஊரெல்லாம்
தேடி அலைகிறது
ஏரியை தொலைத்த பறவை

இறந்தவன் கண்களில்
தெரிகிறது
மரணத்தின் பயம்

சிறகை விரித்து
ஏமாந்து போனது
கூண்டுக் கிளி

தில்பாரதி

பாரியன்பன் - துளிப்பாக்கள்



1.
நதியைப்
பார்த்து விட்டு வந்தேன்
முகத்தில் வறட்சி.

2.

பூட்டிய வீட்டிற்குள்
ஒலிக்கும் சப்தம்
அணைக்காத தொலைக்காட்சி.

3.

கன்னத்தில்
முத்தமிடும் குழந்தை
உதடுகளில் பால்வாடை.

4.
மூச்சிருக்கிறது
உயிரில்லை
தெருக்குழாய்.

5.

சைவத்தையும்
நாளொன்றில் உண்ணும்
அசைவம்.

6.

பொருள் வேறாய்
அர்த்தப்படுகிறது
உச்சரிப்பில் ஒருசொல்.

7.

விதவையின் கூந்தலில்
பல வண்ணப்பூக்கள்
பட்டாம்பூச்சி.

8.

அத்துமீறி நுழையாதீர்
தடை செய்யப்பட்ட பகுதி
வேலிமேல் காக்கைகள்.

9.

இராத்திரி
வானத்திற்கு அம்மை
ஒளிரும் நட்சத்திரங்கள்.

10.

என் மனக்கூரை போலில்லை
என் குடிசைக் கூரை
பொத்தல்கள்.

11.
என் கோபத்தின்
மொத்தவிலை.
உன் மில்லிமீட்டர் புன்னகை.

12.
யாரும் கவனிக்கவில்லை
மரக்கிளையில் பூச்சாண்டி
பால்நிலா.

– கவிதைகள் ஆக்கம்

* பாரியன்பன்

ஹைக்கூவில் பருவ காலங்கள்

தங்கள் ஹைக்கூக்களை வேறொரு பரிமாணத்திற்கு இட்டுச் செல்ல ஒரு முயற்சி...

4 காலங்களின் பகுப்புகளில் தங்கள் கவிதைகளை எழுத இந்தப் பகுதி வழிநடத்தும்...

ஹைக்கூவில் எப்போதும் ஒரு பருவ வார்த்தை இருக்கும். அவ்வார்த்தை கவிதையின் சூழலைப் புலப்படுத்தும். அது ஒரு விதையாக, உணர்ச்சி உலகின் விசையாக, ஒலி, வாசனை, நிறம் இவைகளாக இருக்கும். இவ்வாறு சுருங்கச் சொல்லப்பட்ட ஒன்றின் உருவம், நாம் நிலவு எனக் கூறும்போது, இலையுதிர் கால முழுமதியைக் குறிக்கிறது. வசந்த காலத்தைக் குறிக்க மங்களான நிலவு, மழைக்காலத்தில் குளிர் நிலவு என வரும் (முனைவர் மித்ரா, ஜப்பானிய, தமிழ் ஹைக்கூக்கள், ப.16). ஹைக்கூ ஒரு காலத்தில் பருவங்களுக்கேற்றபடியும் கருத்துக்களுக்கேற்றபடியும் பிரிக்கப்பட்டன. அதில் ஐந்து பருவங்கள் உள்ளன. புத்தாண்டு, வசந்தம், கோடை, இலையுதிர், குளிர் காலம் என ஐந்தாகும். தற்காலத்தில் பருவகாலமின்றி எழுதுவது வழக்கமாகிறது; பருவம் தெரிவிக்கப்படாமல் குறிப்பிடப்படுகிறது. ஆயினும் ஒரு மறைமுகமான கருத்து ஏதாவது ஒரு பருவத்தைப் பற்றி இருக்கும்போது கவிதை மதிப்புடையதாகக் கருதப்படுகிறது. நாமும் தமிழ் ஹைக்கூக்களை மதிப்புடையதாகச் செய்வோம். பருவ காலங்களுக்கான பகுப்புகள் (கருப்பொருள்) கீழே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இவை அனைத்தும் மித்ரா, நெல்லை சு. முத்து, நிர்மலா சுரேஷ், பரிமளம் சுந்தர் ஆகியோரின் ஹைக்கூ ஆய்வு நூலிலிருந்து தொகுக்கப்பட்டு எடுத்துக்காட்டப்படுகிறது. அவர்கள் அனைவருக்கும் என் நன்றி சமர்ப்பிக்கிறேன்.

வசந்த காலம் [இளவேனில்] :

வசந்த காலம் என்பது பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய மாதங்கள் ஆகும்.

பருவம், தட்ப வெப்பம்:

நெடிய பகல், மெல்ல நகரும் நாள், இளவேனில் பகல், இளவேனில் கனவு, நெருங்கும் கோடை, வெப்பம், அமைதி, தெளிவு, குளிர்ச்சி, வெதுவெதுப்பு, இதமான குளிர்.

வானவியல் பகுப்பு:

மறக்கப்பட்ட பனி, மெல்லிய பனி படரல், மங்கிய நிலவு, நிலவொளி, உறைபனி, மாலைப் பனி, பலமான காற்று, கிழக்குக் காற்று, இனிய தென்றல், வாசம் நிறைந்த காற்று, மங்கிய காலை சூரிய ஒளி, வசந்த கால நிலவு, நிலவின் பின் வட்டம்.

புவியியல் பகுப்பு:

மீதியான பனி, உருகும் பனி, மிதக்கும் பனிக் கட்டிகள், வெதுவெதுப்பாகும் நீர், காடும், பெயரில்லாத மலையும், மூடுபனி, கடற்கரை, மந்தமான நீரோட்டம், நீளமானகரை, கடலின் நீரோட்டம், நீரின் சத்தம், சதுப்பு நிலம், கறம்பு நிலம், பசுமையான வயல்கள், தொலைவில் உள்ள வீடுகள், மலர்களின் புன்னகை.

கவனிப்புகள்:

பொம்மைத் திருவிழா, பணியாளர் திருவிழா, புத்தரின் நிர்வாண ஓவியம், புனிதப் பயணம், வசந்தகாலத் தேவதை.

வாழ்வியல் பகுப்பு:

வயலை உழுதல், நெல் விதைத்தல், பட்டுப் பூச்சிகள், காற்றாடி, ஊஞ்சல், பலுன், கடற்கரை மணலில் காலடிச் சுவடுகள், காதல் செயல்கள், வேட்டையாடுதல், தேயிலை பறித்தல், கிளிஞ்சல் சேகரித்தல்.

விலங்குகள்:

காதல் பூனைகள், பூனைக் குட்டிகள், விரையும் அணில்கள், கரிச்சான் குருவி, கழுகின் கூடு, எலிவளை, குயில், முயல், புறா, ஆந்தை, காட்டு வாத்து, கொக்கு, நாரை, கோழி, தவளை, பல்லி, வண்ணத்துப்பூச்சி, தவளைக்குஞ்சுகள், மணலில் குளிக்கும் குருவிகள்.

தாவரங்கள், பூக்கள்:

தாமரை, புன்னைமரம், பலதரப்பட்ட கோரைகள், நடனமாடும் கொடி, புற்கள், பூண்டுகள், கடல்பாசி, வெங்காயப் பூக்கள், கடுகு, டூலிப், மலை ரோஜா போன்றவை.

கோடைக்காலம்

மே, ஜூன், ஜூலை மாதங்களை உள்ளடக்கியது இது.

பருவ, தட்பவெப்பப் பகுப்பு

கோடைக்காலைத் துவக்கம், கோடை வெப்பம், கோடை இரவு, கோடை குளிர்ச்சி, ஜூன் இருட்டு, குறுகிய இரவு.

வானவியல் பகுப்பு

ஜூன் மழை, திடீர் மழை, வானவில், மின்னல், கோடை காலப் புயல்காற்று, குளிர்காற்று, கோடை மழை, வெப்பக் கதிரவன், எரியும் கதிரவன்.

புவியியல் பகுப்புகள்

பச்சை மலைகள், தோட்டம், பசுமை நெல் வயல், அமைதியான மலை, தோட்டத்தில் சூடான பொருட்கள், சதுப்பு நிலம், கோடை ஆறு, தெளிந்த நீர்வீழ்ச்சி.

கவனிப்புகள்

மரக்கத்தி, தொங்கி அசையும் விளக்கு, பதாகைகள், ஆடை மாற்றல்.

வாழ்வியல் பகுப்பு

குழந்தைகள் படிப்பை முடித்த மகிழ்ச்சி, ஆடு, மாடுகள் மேய்த்தல், கூடி விளையாடுதல், குளம், கிணறுகளில் குளித்தல், சதுப்பு நிலத்தில் சவாரி செய்தல், மழைக்கால வேண்டுதல், நெல் விதைத்தல், பகல் தூக்கம், பறைகள் அடிக்கும் ஓசை, நிலவொளியில் துணிகளைத் துவைத்தல், குழந்தைகளைத் தூங்க வைத்தல், ஆற்றைக் கடக்கும் மகிழ்ச்சி.

பறவை, விலங்குகள், பூச்சிகள், பயிர்கள்

கிராமத்துக் குருவிகள், மரத்தில் கட்டப்பட்ட குதிரை, மரங்கொத்தி, தோப்பில் விழும் அட்டை, குயில், நீர்க்கோழி, நண்டு, ஈக்கள், மின்மினி, வண்ணத்துப்பூச்சி, எறும்பு, பாம்பு, சிலந்தி, வெட்டுக்கிளி, பச்சைத் தவளை, நத்தை, இறந்து விழும் விட்டில், காய்ந்துபோன நாணல்கள், சோளம், கோதுமை, திராட்சை, வாழை, பூசணி, பச்சைப் புல்,

இலையுதிர் காலம்

ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர் மாதங்களை உள்ளடக்கியதாகும்.

பருவநிலை, வெப்பதட்ப நிலைப் பகுப்புகள்

நீண்ட இரவுகள், இரவுக்குளிர், ஒளிரும் நிலவு.

வானியல் பகுப்புகள்

பால்வீதி, பிறை நிலா, நட்சத்திர இரவு, மாலை நிலவு, அறுவடை நிலவு, நிலாப் பார்த்தல், பனி மூட்டம், மூடுபனி கிளம்பல், சிவப்பு நிறச் சூரிய வெப்பம், தெளிவான நீல வானம், இலையுதிர் கால மழை, வெள்ளைப் பனித்துளி.

புவியியல் பகுப்புகள்

நிறங்கள், பழ மர நிழல்கள், எங்கிருந்தோ வரும் ஒளி, நெல், வயல், சதுப்பு நிலம், வெள்ளிய கடலலைகள், பரந்த கடல், பயங்கரமான மலைகள், வரிசையான மலைகள், இருளடையும் மலை.

கவனிப்புகள்

இலையுதிர்காலத் திருவிழா, அனைத்து ஆன்மாக்கள் திருவிழா, வீட்டில் கடவுள் பீடம், நெசவுத் திருவிழா, பிரார்த்தனைக்கயிறுகள் (நோன்புக் கயிறு), வாண வேடிக்கை, கல்லறைக்குச் சென்று வேண்டுதல், தெரு விளக்கு.

வாழ்வியல் பகுப்புகள்

நெல் அறுவடை, பூச்சிக் கூண்டு, மாலை நேரத்தில் பாதை வழியாக யாரும் போகாமை, இலையுதிர் காலத்தனிமை, குறட்டை ஒலி, புல்லின்மீது நடத்தல், காளான் சேகரித்தல்.

பறவை, விலங்குகள்

இடம்மாறிச் செல்லும் வாத்துகள், சிவப்புத் தும்பிகள், காய்ந்த கிளையில் அமர்ந்த காக்கை, கொக்கு. காட்டுப் பன்றிகளை அசைக்கும் காற்று, சப்தமின்றிச் செல்லும் காகம், சுவர்க்கோழி கூவுதல், பூனைகள், நடுங்கும் குரங்கு, மான், இறந்த உருப்பில் அமர்ந்திருக்கும் காக்கை, பசுவின் கொட்டகையில் கொசுக்கள், சிள்வண்டுகள், புல்புல் பறவை, நாரை, மரங்கொத்திப் பறவை, வெட்டுக்கிளி, பூச்சிக் குரல்.

தாவரப் பகுப்புகள்

வெள்ளைக் கிரிசாந்தமம், சோளம், கோதுமை, திராட்சை, வாழை, ரோஜா ஆகியவை.

குளிர்காலம்

நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களை உள்ளடக்கியது.

பருவகாலம், தட்பவெப்பப் பகுப்பு

குளிர்காலம், குளிர்காலத் துவக்கம், குளிர்கால இரவு, மழைகால முதல் மழை, மழைகாலத் துவக்கம், மேமாத மழை, ஜூன்மாத மழை.

வானவியல் பகுப்பு

குளிர் நிலவு, பனி நிலவு, குளிர்கால விண்மீன்கள், கார்கால முதல் மழை, தூறல், அடர்பனி, பனிப்பந்து, பனிப்புயல், மங்கிய நிலவொளி, தேய்ந்த நிலவு, நள்ளிரவு மழை.

புவியியல் பகுப்பு

உறைந்த நிலம், வற்றிய நீர்வீழ்ச்சி, சமவெளியில் ஓடும் மழை, ஆறு, சேதமான பாலம், நீர்வீழ்ச்சி ஓசை, பெயரில்லா சிற்றாறு.

வாழ்வியல் பகுப்பு

கரி நெருப்பு, தீ மூட்டல், பழைய நாள்காட்டி, முள்ளங்கி பிடுங்குதல், கண்களுக்கு வலி உண்டாவதால் விளக்கு ஏற்றாமை, அதிக குளிர்ச்சி, போர்வை, மேலாடை, கம்பளியின் தேவை. மழையால் குழந்தையை அழைக்கும் தாயின் பாசக் குரல், புத்தாண்டு கொண்டாட்டம், பொங்கல் பண்டிகை.

பறவை விலங்குகள்

கரடி, கழுகு, காட்டு வாத்து, நீர்க்கோழி, சிப்பி, கடல் பறவை, குளிர் காலத்தில் உயிரினங்களின் இயக்கம். தொடர் மழையால் மாட்டுக்கொட்டகை நீரில் மூழ்குதல். இரவு பகல் என்று அறியாமல் கூவும் சேவல். மழையில் எருதுகள், மழையில் திரியும் பூனை, தேரையின் அடங்கிய குரல், இடைவிடாது ஒலிக்கும் பூச்சிகளின் பாட்டு.

தாவரங்கள்

மழையால் பாதிக்கப்படும் தோட்டம், காற்றால் பாதிக்கப்படும் பயிர்கள் - வயல்வெளிகள், வெளிவரும் புற்கள், மரமொட்டுகள் வெளிவருதல், மழையால் ஒன்றன்மீது ஒன்றாக விழும் இலைகள், கற்பூர மரம், உதிர்ந்த கிரிசாந்தமம்.

சிறக்கை

யுத்தம் நிறுத்து
நித்தம் கலையுது
குருவிகள் கூடு..!

கட்டிடங்களுக்கு கீழே
கல்வி
பதுங்குகுழிகள்

தமிழ்இனத்தின் இரத்தம்
சிங்கள அரசின்
சிவப்புக்கம்பளம்..!

ஐந்திணை கண்ட தமிழன்
ஆறாம் திணையாக
அகதி...!

வெடிகுண்டு சப்தம்
உறக்கத்தில்
குழந்தை.

உயிருடன் புதைப்பு
உருவபொம்மை எரிக்க
தடுப்பு..!

வெள்ளைக் கொடியில் இரத்தம்
வேடிக்கை பார்க்கும்
புத்தன்..!

முள்வேலிக்குள் ஈழம்
முகமூடிக்குள்
தமிழகம்.

போதிமர போதனைகள்
காணாமல் போகும்
பனைமரங்கள்..!

பயந்து ஒழிந்தோம்
பாடையானது
பதுங்குகுழிகள்..!

ஈழபாரதி (பிரான்ஸ்)

1.

ஜல்லிக்கட்டில் மாடுபிடிவீரர் கண்டதும்
அடங்கிப்போனது
மனைவியிடம்

2.

இருக்க இருக்க
அறுந்து போகாது வருகிறது
ஊசிப்போன வடை

3.

குளத்தில் குதிக்க
மண்டையைப் பிளக்கிறது
வெயிலின் தாக்கம்.

4.

பல்லைக் காட்டியவனிடம்
பதிலுக்கு காட்டிவிட்டுப் போகிறாள்
செருப்பு

5

வடை சுடும் பாட்டி
காணாது தேடுகிறது குழந்தை
நிலாவில்

6

முதியோர் இல்ல வாயில்
அனுமதிக்க மறுக்கிறார் காவலர்
தாயைத் தேடும் நாய்க்குட்டி

7

உருகிப் போகிறது
குழந்தையைக் கண்டதும்
குச்சிஐஸ்

8

பசியோடு கட்டியிருக்கும் கன்று
அவிழ்த்து விட நிரம்புகிறது
பால்காரனின் பாத்திரம்

9

வளைந்து நெளிந்து
விரைவாக மேலேறுகிறது
மலைப்பாதையில் வாகனம்

10.

நிறையக் காய்க்கிறது
நான் விதைத்த அவரை
பக்கத்து வீட்டில்

- முருகேஷ்

சென்ரியு - இலக்கணம்

(சுருக்கமாகச் சொல்வதென்றால் கவித்துவம் அதிகமாக இருந்தால் 'ஹைக்கூ'. கவித்துவம் குறைந்து நகைச்சுவை உணர்வு மேலோங்கி இருந்தால் அது 'சென்ரியு'.)

சென்ரியுவும் ஜப்பானிய மொழிக்கவிதை. 3 அடிகள் கொண்டது. ஜென் தத்துவம், இயற்கை மற்றும் மெய்யியலோடும் சிறிது தொடர்பு கொண்டு நகைச்சுவை உணர்வை நோக்கமாகக் கொண்டு எழுதப்படுவது சென்ரியு ஆகும். சென்ரியு சமூகம், அரசியல் ஆகியவை குறித்து நகைச்சுவை உணர்வோடும் அங்கத உணர்வோடும் வெளிப்படுத்தும்.

'சென்ரியு' என்னும் புனைப்பெயரைக் கொண்ட 'கராய்ஹச்சிமோன்' என்னும் ஜப்பானியக் கவிஞர் கி.பி. 18ஆம் நூற்றாண்டில் இவ்-விலக்கியத்தை அளித்தார். பின்னர் அக்கவிஞரின் புனைப் பெயரே அக்கவிதை வகைகளுக்கான பெயரும் ஆயிற்று. தமிழில் இவ்வகையை நகைப்பா என்கிறார்கள்.

தமிழ்நாட்டு 'சென்ரியு' 3 அடிகள் கொண்டு எழுதப்படுகிறது. அவ்வாறு 3 அடிகள் கொண்டு எழுதப்படுவதை தமிழ் அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு 'சென்ரியு' வடிவமாகவும் அங்கீகரித்துள்ளார்கள். இது இந்திய சமூகம், அரசியல் ஆகியவை குறித்த போக்கை நகைச்சுவை உணர்வோடும் அங்கத உணர்வோடும் வெளிப்படுத்த ஏற்ற மிகச் சிறந்த வடிவம் ஆகும். எனவே இந்தியாவின் சூழலுக்கு தமிழில் 'ஹைக்கூ'வை விட 'சென்ரியு' சிறந்த வடிவம் / உள்ளடக்கம் ஆகும்.

மக்களின் பிரச்சினைகளை வேடிக்கையாகவும், நகைப்பாகவும், அதே நேரத்தில் சமுதாய நலனை - முன்னேற்றத்தை - சீர்த்திருத்தத்தை முன்னிறுத்தி சென்ரியுக்கள் படைக்கப்படுகின்றன. "தேநீர்க் கடைகளிலும், மதுபானக் கடைகளிலும் ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக்கொண்டு இவ்வகை கவிதைகளைச் சொல்லும் மரபு ஜப்பானில் இயல்பாக இருக்கிறது" (ஞானி, தமிழன்பன் படைப்புகளும் பார்வையும், ப.317) என்பதால், சென்ரியு கவிதைகளை யார் வேண்டுமானாலும் எழுதலாம். ஏனெனில் அதற்கு எதை எழுத வேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லை என்பதால் எதை வேண்டுமானாலும் அந்த வடிவத்துக்கு உட்பட்டு எழுதலாம். (ஹைக்கூ எழுத சிறிதாவது நுன்மான் நுழைப்புலம் வேண்டும்) நீங்கள் கூட ஒரு நாளைக்கு ஒரு செய்தித்தாள் மட்டுமே கூட வாசித்தால் ஏறக்குறைய 100 சென்ரியு கவிதைகள் எழுதிவிட முடியும்.

"தேநீர்க் கடைகளிலும், மதுபானக் கடைகளிலும் எளிய மனிதர்கள் இலக்கிய நயங்களை இயற்கையை, கவித்துவத்தை, கவிதைப் பற்றிய

உட்சிந்தனையை விரும்பாதவர்கள் ஒருவரோடு ஒருவர் களிப்பூட்டிக் கொள்ளும் முறையில் பேசிக் கொள்ளும் போது, அங்கதக் கவிதைகளில் அர்த்தச் செறிவும் கவித்துவமும் ஹைக்கூவாகவும் பேசிக் கொண்டிருக்க மாட்டார்கள் என்பது நாம் அறிந்ததே" (ஞானி, தமிழன்பன் படைப்புகளும் பார்வையும், ப.319) என்பதால்,

இயற்கையை தவிர்த்த மூட நம்பிக்கைகள், காதல், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, பிச்சை யெடுத்தல், வறுமை, சாதி, மதம், வரதட்சணை, பெண்ணியம், தலித்தியம் போன்ற சமுதாயச் சிக்கல்களும், நீதியின் முரண்பாடுகள், நோய்கள், அன்றாட செய்திகள், அரசியல் சார்ந்த விமர்சனங்கள், உரை நடை போன்ற அமைப்பில் நேரடியாகக் கருத்தை சொல்லுதல்; அறிவுறுத்தல் இவை போன்ற பிற கருப்பொருள்கள் (ம. ரமேஷ், ஓராயிரம் சென்ரியு, ப.19) அனைத்தும் சென்ரியு வகையைச் சார்ந்தவையாக அமைகின்றன.

இயற்கை, மெய்யியல் மற்றும் கவித்துவம், குறியீடு, படிமம், தொன்மம் ஆகியவற்றையும் அவற்றின் வகைகளையும் கருத்துச் செறிவையும் கொண்டதாக இருக்கும் ஹைக்கூவைத் தவிர பிற அனைத்தும் சென்ரியு வகையைச் சேர்ந்ததாகும். நம்பிக்கையிழந்ததால், பிற சூழ்நிலைகளை இழித்துப் பேசும் தன்மையும் இவற்றில் உண்டு. பல சென்ரியுக்கள் கருத்தில் நேர்த்தியில்லாத, சிறிதும் கலையழகும் வேலைப்பாடுமற்ற வெளிப்படையான விமர்சனங்கள் ஆகும்.

மூட நம்பிக்கைகள், காதல் மற்றும் அதோடு தொடர்புடைய பலவும், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, பிச்சை, வறுமை, சாதி, மதம், வரதட்சணை, பெண்ணியத்தின் சாடல் போன்ற சமுதாயச் சீர்கேடுகளும், நீதியின் முரண்பாடுகள், நோய்கள், அன்றாடச் செய்திகள், அரசியல் சார்ந்த விமர்சனங்கள் மற்றும் புகழ்பாடுதல், உரைநடை போன்ற அமைப்பில் நேரடியாகக் கருத்தை சொல்லுதல் மற்றும் அறிவுறுத்தல்கள், இவை போன்ற பிற (புதுக் கவிதையில் கருப்பொருளாகப் பயன்படுத்தும் மேலும் பல) அனைத்தும் சென்ரியு வகையைச் சார்ந்தவையாகும். தமிழ் ஹைக்கூக் கவிஞர் பெரும்பான்மையும் இவ்வகைக் கவிதைகளையே அதிகம் படைத்துவிட்டு ஹைக்கூ என்று தலைப்பிட்டுக் கொள்கிறார்கள். தற்போது உங்களால் எது ஹைக்கூ? எது சென்ரியு? என்று பிரித்து அடையாளம் காண முடியும் என நினைக்கிறேன்.

தமிழ் ஹைக்கூ, ஜப்பானியப் பாரம்பரியத்தைப் பின்பற்றுவதாய்த் தெரியவில்லை. இதற்குப் படைப்பாளர் சிலரின் அறியாமையும், ஒரு காரணமாயிருக்கலாம், சிலர் அதனைப் பொருட்படுத்தாமையும் காரணமாயிருக்கலாம் என்கிறார் டாக்டர் பட்டத்துக்காகத் தமிழ் ஹைக்கூக்களை சென்னைப் பல்கலைக்கழகத்துக்காக ஆய்வு செய்த நிர்மலா சுரேஷ் அவர்கள். தமிழில் முதன்முதலாக ஈரோடு தமிழன்பன் 'சென்ரியு' படைத்துள்ளார். தமிழில் சிலரே 'சென்ரியு' எழுதி வருகிறார்கள். தமிழில் 'ஹைக்கூ' பற்றிய சரியான புரிதல் இல்லாமல் எழுதப்படும் 'ஹைக்கூ' எல்லாம் 'சென்ரியு' கவிதையாகவே காணப்படுகின்றன.

சென்ரியு கவிதைகளுக்கான எடுத்துக்காட்டுகள்

தெய்வம்சிலைக்கு வெளியே போய் வந்த
கடவுள் சிலையாய் நின்றார்
சிலையைக் காணோம்
(ஈரோடு தமிழன்பன், ஒரு வண்டி சென்ரியு, ப.40)

ஆயிரம் பேரோடு
வேட்பு மனுத் தாக்கல்
ஐம்பது வாக்குகள்
(ஈரோடு தமிழன்பன், ஒரு வண்டி சென்ரியு, ப.43)

வரவேற்றுக் கும்பிடும்
பொம்மைகளைப் போலிருக்கிறார்கள்
ஓட்டு கேட்கும் வேட்பாளர்கள்
(கவின், ஒரு டீ சொல்லுங்கள், ப.95)

அழகு நிலையம்
ஹேங்கரில் தொங்குகிறது
தாலி
(கவின், ஒரு டீ சொல்லுங்கள், ப.16)

சிறுதெய்வ வழிபாட்டில்
பெருந் தெய்வங்கள் வன்முறை
தேவியின் திருவிளையாடல்
(பாரதி வசந்தன், யாதெனில், ப.36)

அம்மா விளையாடப் போறேன்
என்ன விளையாட்டு?
போய்ப் படி
(ம. ரமேஷ், ஓராயிரம் சென்ரியு, ப.20)

கோயில் இல்லாஞ் நிறுத்து
டாஸ்மாக் இல்லா ஊரில்
குடியிருக்க வேண்டாம்
(ம. ரமேஷ், ஓராயிரம் சென்ரியு, ப.120)

மழலை பேசுகிறது குழந்தை
தலையாட்டி ஆட்டிக் கேட்கிறது
தஞ்சாவூர் பொம்மை
(ந.க.துறைவன், தவளை குதித்த குளம், ப.64)

துணிந்தபின் துயரம் எதற்கு?
காதலனிடம் கேட்டாள்
சிசுவைக் கொல்லவா? வளர்க்கவா?
(ந.க.துறைவன், தவளை குதித்த குளம், ப.82)

ஹைக்கூ பற்றிய கண்ணோட்டம்

கௌசி

கவிதை கட்டுரையல்ல. கவிஞன் உள்ளத்து உணர்ச்சிகளின் வெளிப்பாடு. அவன் பேசுகின்ற விடயங்களில் பல மௌனங்கள் மறைந்திருக்கும். அதனை தேடிப்பெறுபவனே சிறந்த கவிதா ரசிகன். மறைவாக ஆழமாகச் சிற விடயங்கள் சிறப்பாகச் சொல்லப்படும் துளிர்ப்பாவே ஹைக்கூக் கவிதையாகின்றது.

தமிழைப் போன்று சங்கம் வைத்து இலக்கியம் வளர்த்த ஜப்பானிய புகழ்பெற்ற கவிதை வடிவமே ஹைக்கூவாகும். 1603 தொடக்கம் 1863 வரையுள்ள காலப்பகுதியில் சீன ஜப்பான் மொழிகளின் கலவையாக உருப்பெற்ற இக்கவிதை வடிவத்தினைப் பல நாடுகள் பின்பற்றி வந்தன. அவ்வகையிலேயே இன்று தமிழ்மொழியிலும் ஹைக்கூக் கவிதைகள் எழுதப்படுகின்றன. முதன் முதலில் 16.10.1916 அன்று வெளிவந்த சுதேசமித்திரன் என்னும் பத்திரிகையில் மகாகவி பாரதியார் ஜப்பானிய கவிதைகள் என்னும் தலைப்பிலே சில ஜப்பானிய ஹைக்கூக்களை மொழிபெயர்த்து எழுதியிருந்தார். இதுவே தமிழில் ஹைக்கூக்களின் புதுவரவாக அமைகின்றது. இவர் ஹைக்கூக் கவிதைகளை அறிமுகப்படுத்தும்போது இதன் பெயரைக் ஹொக்கு என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும் ஹைக்கூத் தொகுப்பு நூலாக வெளிவந்த முதல்நூல் அமுதபாரதியின் ''புள்ளிப்பூக்கள்'' என்னும் நூலேயாகும். இது ஆவணி 1984 இல் வெளியானது. அதனைத் தொடர்ந்து 1984 கார்த்திகை மாதம் அறிவுமதி அவர்கள் ''புல்லின் நுனியில் பனித்துளி'' என்னும் நூலை வெளியிட்டார். நிர்மலா சுரேஷ் என்னும் பெண்கவிஞர் ஹைக்கூ பற்றிய ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்துள்ளார். கவிஞர் கு.தேன்மொழி அவர்களால்

எழுதி வெளியிடப்பட்ட "துளிப்பாக்களில் அழகியலும் சமுதாயமும்'' என்னும் பெயரில் வெளியிடப்பட்ட ஆய்வுநூலும் ஹைக்கூ பற்றிய தெளிவையும் சிறப்பையும் எடுத்துக்காட்டுகின்றது. ஜப்பானிய வாகா, சோகா, செடோகா, கட்டவ்டா, தான்கா, ரெங்கா, ஹொக்கு முதலிய இலக்கிய வடிவங்களை இனங்காட்டித் தமிழிலே ஹைக்கூ எப்படி கையாளப்படுகின்றது என் விளக்கியுள்ளார்.

ஹைக்கூ கவிதையானது ஐந்து, ஏழு, ஐந்து என முறையே 17 அசைகளைக் கொண்டு 3 அடிகளில் எழுதப்படும். காற்றின் கைகள் என்னும் அமுதபாரதியின் நூலிலே இவ் அசை அமைப்புடன் கூடிய ஹைக்கூக் கவிதைகளைக் காணலாம். ஆனால் தற்போது அவ் இலக்கணம் கண்டுகொள்ளப்படுவதில்லை. ஒரேயொரு காட்சியையோ பொருளையோ உணர்வையோ வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும். இதன் ஆரம்பப் பெயர் ஜப்பானியரால் ஹொக்கு என்று வழங்கப்பட்டது. ஹைகை என்று திரிந்து அதாவது தமிழில்க ஐகை என்று திரிந்து ஐக்கூவாயிற்று. அதாவது அணுத்தூசி போன்ற சிறிதானது என்னும் பொருள் கொண்டது. ஐ என்றால் கடுகு கூ என்றால் உலகம் கடுகு போன்ற சிறிய வடிவில் உலகளாவிய கருத்துக்களை செறிவாகத் தரும் கவிதை என்னும் பொருளிலும் வழங்கப்படுகின்றது.

வரிகளால் பெருந்தூண் எழுப்பாமல் குறைவான சொற்களால் அழகுணர்ச்சியை வெளிபடுத்த ஹைக்கூ கைகொடுக்கின்றது. வெளிப்படையாக எல்லாவற்றையும் கூறாமல் வாசகன் சிந்தனைக்கு இடம் கொடுக்கவேண்டும். ஹைக்கூக் கவிதைக்குத் தலைப்புத் தேவையில்லை. கவிதையின் அழகை இறுதி வரிகளில் அடக்க வேண்டும். இறுதி அடியில் முழுக்கவிதையினதும் வெளிப்பாடும், உணர்வும் பளிச்சென்று புலப்படும். இது மின்மினிப்பா, குறும்பா, வாமன் கவிதை, அணில்வரிக்கவிதை, துளிக்கவிதை, சிந்தர், கரந்தடி, விடுநிலைப்பா என்னும் பெயர்களினால் தமிழில் அழைக்கப்படுகின்றது.

அப்துல் ரகுமான் அவர்கள் பல ஹைக்கூக் கவிதைகளை மொழிபெயர்த்தார். எம்மைச் சுற்றி ஒராயிரம் ஹைக்கூக்கள் ஆழமாக நோக்கினால் அத்தனையும் அற்புதங்கள். சென் தத்துவத்தைப் பரப்புவதற்குக் ஹைக்கூக் கவிதைகள் மிகவும் உதவின.

அமுதபாரதியின ஹைக்கூ

குளமொன்றை வெட்டு
குறைவின்றி நீர் நிரப்பு
குளிக்க வரும் நிலவு

தற்போது வரிகளுக்கு முக்கியத்துவத்தை அளித்து அசை பற்றிய அக்கறையை விடுத்து ஹைக்கூக்கள் எழுதப்படுகின்றன.

தற்போது இணையங்களில் பல சிறப்பான ஹைக்கூக்கள்

வெளிவருகின்றன.

பத்துமலைத் தைப்பூசம்
உண்டியலைப் பார்த்தபடி
ஏழைச்சிறுமி.

வாளியைக் காலி செய்ததும்
வானத்துக்குப் போனது
நிலவு.

தற்போது வரிகளும் அசைகளும் இழந்த நிலையில் ஹைக்கூ என்ற பெயரில் வெளிவரும் அற்புதமான ஹைக்கூக்களும் உண்டு.

அழகான பொய்களில் அன்பினைப் பெறுவதை விட
உண்மையான கோபங்களை அன்பாகவே
ஏற்றுக்கொள்ளலாம்.

இவ்வாறு ஹைக்கூ தமிழில் வந்து புகுந்தது. தன் அமைப்பையும் இலக்கணத்தையும் மாற்றி புதுப்பொலிவுடன் ஹைக்கூ என்னும் பெயருடன் இணையத்தளங்களிலும் முகநூல்களிலும் வலம் வருகின்றது.

பதுங்கியபடி
விடுதலை கேட்கிறது
கடமை தவறிய நீதி!

திருக்கல்யாண உற்சவம்
தாலிக்கு காத்திருக்கிறாள்
முதிர்கன்னி!

– அம்பிகா குமரன்

மொழி பெயர்ப்பு துளிப்பா

The old pond
Afrog jumpd in
water's Sound

ஆதிக்குளம்
பாய்ந்தது தவளை
நீரோசை

The in the water
Broken and broken again
Still it is there

உடைகிறது மீண்டும் மீண்டும்
இருந்தும் அங்கேயே இருக்கிறது
நீர் நிலா

An autumn Eve
She comes and asks
Shall light the lamp

அந்தியில் விளக்கேற்ற
இசைவு கேட்கிறாள்
குடும்ப விளக்கு

The long night
The monkey thinks how
To catch hold of the moon

நீளிரவு
சிந்திக்கும் குரங்கு
நிலா பிடிக்க

புதுவைத் தமிழ்நெஞ்சன்

ஹைக்கூ உத்திகள்...

தமிழ்நாடன் எழுதி பார்வதி புக் ஷாப் வெளியிட்ட "ஜப்பானியக் கவிதைகள்" நூல் ஜப்பானிய கவிதை வடிவங்களான கிங்கபூ, ஹைகூ, சென்ரியூ பற்றி விரிவாக கூறுகிறது. இந்நூல் 9 அத்தியாயங்களைக் கொண்டது. 9 வது அத்தியாயம் 'ஹைகூ உத்திகள்' என்பது. நாமும் அந்த உத்திகளை அறிந்து கொண்டால் சிறப்பாக ஹைகூ எழுதலாம். அந்த அத்தியாயம் இதோ...

ஹைகூ உலகக் கவிதையாகக் காரணமாணவர்களில் ஒருவர் ஆர்.ஹெச்.பிளித் ஜப்பானில் வாழ்ந்தவர். ஜென் குரு ஒருவரிடம் சிலகாலம் பயின்றவர். ஹைகூவை விரிவாக நான்கு தொகுதிகளில் அறிமுகப்படுத்திய அவர் ஹைகூ எழுதும் உத்திகளை விளக்கினார்.

ஹைகூப் படைப்பில் கவனத்திற்குரியவை...

1. நகைச்சுவை
2. சுருக்கம்
3. ஜப்பானிய மொழி இயல்பு
4. இரட்டைக் கிளவி
5. ஹைகூ யாப்பு
6. கிரேஜி
7. ஹைகூத் தொடர்
8. பருவ காலங்கள்.

1. நகைச்சுவைச் சொல்

ஹைகூவின் எள்ளல் கவிதையின் அழுத்தம் குறைக்கும். எளிதில் பொருள் விளங்காத சொற்களை ஏதோ அறிந்தது போல அருகில் கொண்டு வரும். விலகி நிற்கும் கருத்துக்களை ஒரு பாலம் போல இணைக்கும். தடைகளை அகற்றும். அறிவுணர்வை ஒங்குவிக்கும். ஹைகூவின் முதல் வடிவமான ரெங்கா யாப்பு வகையிலும் நோ இலக்கியத்திலும் நகை, எள்ளல் உண்டு.

2. சுருக்கம்

சுருக்கமே அறிவின் விளக்கம். அளவில் அல்ல சுருக்கம். குணத்தில். அதிகமான வார்த்தைகளை விலக்குக. குறைவாகப் பேசுக. தந்தி போல வார்த்தைகளை இசை நயமான சொற்களால் இணைக்க.

3. ஜப்பானிய மொழியின் இயல்பு.

ஜப்பானிய மொழியில் (அண்மைக் காலம் வரை) எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் வேறுபாடு இல்லை. வார்த்தைகளின் முனைகள் மழுமழுப்பாக. ஆதலால் வாக்கியக் கட்டுமானத்தில் உறுத்தல் இருப்பதில்லை. நிறுத்தக் குறிகளும் இல்லை. இவை ஹைகூ வடிவம் தனித்தன்மை பெறும் காரணிகள். ஹைகூவுக்கு மொழிக் கட்டுப்பாடும் இல்லை. பேச்சு வழக்கு, வட்டார வழக்கு, இலக்கிய வழக்கு, சீனா மொழிச் சொற்கள் எதையும் ஏற்கும்.

4. இரட்டைக்கிளவி

ஜப்பானிய மொழியில் இரட்டைக்கிளவி அதிகம். அவை பொருட்களின் பண்புகளை நேரடியாக ஒலி உருவாகப் பிரதி செய்தவை. ஹைகூவின் இரட்டைக்கிளவி உச்சரிப்பின் ஏற்ற இறக்கத்தால் மற்ற சொல்லோடு சேர்க்கையில் தோன்றும் ஒலி வேறுபாடுகளால், எதிரொலிப்பால் இசையொழுங்கு பெறும்.

பூசனின் ஒரு ஹைகூ

ஹாரு நோ யுமி
ஹினிமோசு நொட்டாரி
நொட்டாரி கானா.

வசந்த காலக் கடல்
மெல்ல உயர்கிறது தாழ்கிறது
நாள் முழுவதும்.

நொட்டாரி நொட்டாரி உச்சரிக்கையில் கடல் அலை ஒலிக்கும். எழும் விழும்.

ஹைகூ இரட்டைக்கிளவியின் வாசிப்புக் குரல் :

1. வெளி உலகின் ஒலியைப் பிரதிபடுத்தும்
2. ஒலி தவிரவும் ஓர் அசைவை, இயக்கத்தைத் தோற்றுவிக்கும்.
3. கவிஞரின் மனநிலையப் பிரதிபலிக்கும்.

ஹைகூ, இசைப்பாட்டு உரக்கப் படிக்கப்பட வேண்டும். திரும்பத் திரும்ப உரக்க. ஹைகூவின் முழுமையான, சரியான பொருள் உணரப்பட வேண்டுமெனில் அது கேட்கப்பட வேண்டும்.

5. யாப்பு வடிவம்

ஹைகூவின் 5,7,5 அசை நீரலையைப் போல ஓட்டம், எழுதல், விழுதல் பண்புகளுடைய வடிவம். தர்க்க இயலின் நேரியல்வாதம் மூன்று படிகளைக் கொண்டது. ஹைகூவும் மூன்று படிகள் தான். ஆனாலும் ஹைகூ தர்க்கம் செய்யாது. அசை, அடி விதிகளை மீறிய கவிஞர் பலர். சிலர் புகழ் பெற்றவர். மரபு அறிந்தவர். பாஷோவின் ஹைகூக்களில் 10,7,5; 8,7,5; 5,10,5; 6,8,5

என்ற அசையுள்ளவை உண்டு. பூசனின் ஒரு ஹைகூ 16 அசை. இருபதாம் நூற்றாண்டில் பெருமாற்றம். செய்சென்சூவின் ஹைகூ ஒன்றில் 2,1,3 அசைகள் மட்டுமே. இத்தகைய மாற்றத்திற்குக் காரணம் மரபின் மீது மரியாதை குறைந்து போனது, அயல்மொழித் தாக்கம் மற்றும் கவிஞர் ஷிகியின் குயில் இயக்கம்.

6. கிரேஜி

கிரேஜி ஹைகூவில் ஒரு நிறுத்தம். இது கவிஞனின் மனநிலையைக் காட்டும். கிரேஜி சொற்கள் பல. முக்கியமானவை மூன்று. யா, கானா, கேரி, இவை யா, ஆ, ஓ போல,

கி மி யா சோ
வ ரே யா சோ ஹி நோ
யுமி கோ கோ ரோ பாஷோ

நீ வண்ணத்துப்பூச்சி
சோசியின் கனவு காணும்
இதயம் நான்.

கானா. இதற்கு தனிப்பொருள் இல்லை. கானாவுக்கு முன்னால் நிற்கும் சொல் முக்கியமானது. அதைக் காட்டும் அடையாளம் கானா. கேரி காலம் காட்டும். மனநிறைவு, வியப்பு, முதலானவற்றின் வெளிப்பாடு இச்சொல். ஹைகூவின் தலை இடை கடை என எவ்விடத்தும் கிரேஜி வரலாம்.

7. ஹைகூத் தொடர்

ஹைகூ ஒற்றைக் கவிதை. கவிஞர் சிகியும் தோழர்களும் ஏதேனும் ஒரு தொடர்புடையதான பல ஹைகூகளை ஒன்றன் பின் ஒன்றாக வைத்து ஹைகூத் தொடர் (அநேகமாய்ப் பத்து) ஆக்கினார்.

8. பருவம்

ஹைகூவில் பருவம்/காலம் காட்டும் சொல் இன்றியமையா உறுப்பு. பருவம் நான்கு. வசந்தம், கோடை, குளிர், இலையுதிர் காலம். புத்தாண்டு தினத்தையும் ஒரு பருவமாய் சொல்வதுண்டு. நிலா எனில் இலையுதிர் கால முழுநிலா, கோடை நிலா, குளிர்கால நிலா, அரை நிலா இவற்றுக்குத் தனித்தனி சொற்கள். மலரெனில் செர்ரி. மற்றவற்றிற்கு அதனதன் பெயர்.
ஹைகூப் பருவத் தொடர்பு

அ. வெப்பம் அல்லது குளுமை. நாளின் நீளம்.

ஆ. வானம், பனி, மழை, காற்று, மேகம், மின்னல், விண்மீன், புயல் இவை போல.

இ. ஆறு, கடல், மலை, புல்வெளி, நெல்வயல் போல.

ஈ. புண்ணியத்தலம், கடவுள், பக்தர், புத்த ஷின்டோ மதத் திருவிழா, புனிதப் பயணம். கல்லறை காணல் போல.

உ. மனிதர் செயல், மனிதர் உடை, மீன் பிடித்தல், பொதுவிழா, நெல் நடவு, வானவெடி, கொல்லைப் பொம்மை முதலியன.

ஊ. பறவை, விலங்கு

எ. மரம், மலர், டர்னிப் பூண்டு, காளான் போன்ற தாவரம்.

* மொழி பெயர்ப்பாளர்களுக்கு பிளித்

ஹைகூ மூலத்தில் இல்லாத எது ஒன்றையும் மொழியாக்கத்தில் சேர்க்கக் கூடாது. கானா, கிரேஜி இவற்றை வேறு மொழியில் பெயர்க்க இயலாது. இதற்குச் சமச்சொல் இல்லை. ஹைகூவில் ஒருமையே வழக்கம். மலர்கள், மின்மினிகள், வாத்துகள் போன்ற பன்மை விதிவிலக்கு. தன்மை ஒருமைப் பெயர்ச்சொல் ஹைகூவில் பயில்வதில்லை. இயற்கையோடு ஒன்றுதற்கு நான் அகல்வது வேண்டும். ஜென் நான் அற்றது.

ஆதாரம் : தமிழ்நாடன் எழுதிய "ஜப்பானியக் கவிதைகள்" நூல்.
தொகுப்பு : ச.கிறிஸ்து ஞான வள்ளுவன், வேம்பார்.

ஹைக்கூ

■

விலைமதிப்பில்லா அன்பும்
அனாதையாக்கப் பட்டது
முதியோர் இல்லத்தில் தாய்.

■

இனிப்பால் வந்த
கசப்பான செய்தி
சர்க்கரை நோய்.

■

மனிதனின் வேகத்திற்காய்
வீழ்த்தப்பட்டன மரங்கள்
நெடுஞ்சாலை விரிவாக்கம்.

■

சுருங்கியது உலகம்
உறவுகள் தூரமானது
நவீன வளர்ச்சியால்.

■

ஓடியாடிய குழந்தையை
ஒரே இடத்தில் அமரச் செய்தது
அலைபேசி.

– ச. கிறிஸ்து ஞான வள்ளுவன்
வேம்பார்.

ஹைபுன் - இலக்கணம்

ஹைபுன் (Haibun)

ஜப்பானிய மொழியில் கவிதையின் வடிவங்கள் பல காணப்படுகின்றன. ஹைக்கூ, சென்ரியு, ரெங்கா, தன்கா என்ற வரிசையில் ஹைபுன் (Haibun) *என்ற கவிதை வடிவமும் இடம்பெறுகிறது.*

ஜப்பானிய மொழியில் ஹைக்கூவிற்குப் புகழ்பெற்ற பாஷோ என்பவர் ஹைபுன் கவிதையை முதன் முதலாக எழுதியுள்ளதாக அறியப்படுகிறது.

தமிழில் இன்று ஹைக்கூ, சென்ரியூ, லிமரைக்கூ என பல்வேறு வடிவங்களில் எழுதப்பட்டு வருகின்றன. ஹைக்கூவின் அடுத்த முயற்சியாய் அண்மையில் ஹைபுன் வடிவம் எழுதப்பட்டு வருகின்றது. இவற்றில் சமூக அவலங்கள், அன்றாட நிகழ்வுகள், இனிய சம்பவங்கள் என அத்தனையும் பதிவு செய்ய வாய்ப்பு இருப்பது ஹைபுனின் தனிச் சிறப்பாகும்.

ஹைபுன் - இலக்கணம்

ஒரு மொழியில் சிறப்பு பெறும் படைப்பு வடிவத்தை, வேறு மொழியில், அம்மொழியின் தன்மைக்கு ஏற்றவாறு அதன் புற வடிவத்தை மாற்றிக்கொண்டு செழித்து வளர்கின்றது இயல்பான வளர்ச்சியாக கருதப்படுகின்றது. ஹைபுனின் தமிழ் இலக்கணமாக பின்வருவனவற்றை வரையறுத்துக்கொள்ளலாம்:

"செறிவான உரைவீச்சில் முரணான நிகழ்வுகளை இணைத்தும், ஒரே விதமான சம்பவங்களை கோர்த்தும், அதற்கிணையான ஒரு செறிவான ஹைக்கூவோடு நிறைவு செய்வதே ஹைபுன் ஆகும்." (அன்பாதவன், மாய வரம், ப.வீஸ்) ஹைபுன் என்பது தமிழ் உரைநடையிடப்பட்ட பாட்டுடை செய்யுளுடன் ஒப்பிடத்தக்கது.

"ஹைபுன் என்பது கவித்துவமான சிறிய கட்டுரை. அதில் உரைநடையாய் விரவிக் கிடக்குது ஹைக்கூக்கள். கட்டுரையின் இறுதியில் முத்திரை பதிக்கும் ஹைக்கூ. அது கட்டுரையை சார்ந்தோ அல்லது உள்ளடக்கியோ இருத்தல் நலம்" (அன்பாதவன், ந.க.துறைவன் (முதலியோர்), தலைக்குமேல் நிழல், ப.5)

"ஹைபுன் என்பது உரைநடையும் ஹைக்கூவும் இணைந்த ஒரு அர்த்தநாரி வடிவம். ஒரு துண்டு உரைநடை - அது கதை, கவிதை, வாய்மொழிச் சொல்லாடல்கள், குறிப்புகள், மற்றும் விவரங்கள் என எது வேண்டுமானாலும் இருக்கலாம்" (சுஜாதா, 'சின்ன சின்ன சிந்தனைகள்', குமுதம், நாள்.25.8.2003) என்று ஹைபுன் கவிதைக்கு இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது.

தமிழில் முதன் முதலாக அறுவடை நாளில் மழை **(2003)**, மாய வரம் **(2006)** தலைக்கு மேல் நிழல் **(2007)** என்ற ஹைபுன் கவிதை தொகுதிகள் வெளிந்துள்ளன. சிற்றிதழ்கள் பல இன்று ஹைபுன்களை வெளியிட்டு வருகின்றன. மேற்கண்ட மூன்று ஹைபுன் கவிதைத் தொகுப்புகளிலிருந்து கவிஞர்களின் ஹைபுன் கவிதை பின்வருமாறு:

மு. முருகேஷ்

அவர் பெரிய விமர்சனப் புள்ளி. கறாரான பேர்வழி. முகம் பார்க்க மாட்டார். பேனா எடுத்தால் யாரையும் விட்டு வைக்க மாட்டார். அவர் பார்வைதான் சரி. அவருக்குப் பிடித்தது போல் எழுதினால் பாராட்டில் நனையலாம். இல்லையென்றால் போச்சு. எழுதினால் சூடு கிளம்பும். அப்படியான எழுத்து. இது குப்பை. இது தெண்டம். கோபம் வெடிக்கும். ‘இலக்கியம் தெரியாம என்னத்துக்கு எழுத வர்றான்’ இடி வசனம். பற்கள் தெறிபடும். பக்கம் பக்கமாய் கிழிபடும். பேனா மையும் தீர்ந்து விடும்.

வாழை இளங்குருத்துக்களை
கடித்து குதறுகின்றன
குரங்குகள்

(மு. முருகேஷ், அறுவடை நாளில் மழை)

அன்பாதவன்

பிள்ளைகள் யாவர்க்கும்
மலையனூர் அங்காளம்மனுக்கு
கெடாவெட்டி படையலிட்டு
முடியிறக்கி காது குத்துவது
அம்மாவுக்கு வழக்கம்.
‘உயிர்பலி கொடுக்காதீர்கள்’
வேண்டுகோள் படித்த பிறகு
விலைக்கு வாங்கி நேர்ந்து விடுவாள்.
வந்தது
‘உயிர்பலி தடைச்சட்டம்’
உறுதியோடு கொன்னாள்
அத்தாவுக்கும் எனக்கும் நடுவுல
எந்த சட்டமும் மசுருதான்

கட்டளையிட்டது மடம்
கைமாறியது பணம்
காமாட்சி மடியில் பிணம்

(அன்பாதவன், மாயவரம், ப.65)

ந. க. துறைவன்

ஆதிகால வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ள பிரதான வாகனம் கழுதை. வயலை உழுவதற்கும், சுமை தூக்குவதற்கும் பெரிதும் பயன்படுத்தினார்கள். கழுதை என்றால் அழகிய பெண் என்று கதைக்கிறார்கள். கழுதை என்றால் செல்வம் என்று இன்னொரு அர்த்தம் சொல்கிறார்கள். கழுதை என்றால் காமக்குறியீடாகவும் பேசுகிறார்கள். குற்றம் செய்தவர்களைக் கரும்புள்ளி செம்புள்ளிக் குத்தி அதன் மேலேற்றி ஊர்வலம் நடத்துகிறார்கள். 'கழுதைக்கு தெரியுமா? கற்பூர வாசனை' என்று யாரையேனும் திட்டுவதற்கும் பயன்படுத்துகிறார்கள்.

சுவரில் தொங்கும் கழுதை படம்
வாசகம் சொல்கிறது:
என்னைப் பார் யோகம் வரும்.

■

ராஜகவி ராகில் - கவிதைகள்

■

பெண் விடுதலை பற்றி
பேசியவன் பையில்
வீட்டுச் சாவி

■

ஓடையாக இருந்தாலும்
உன்னை நதியாக்குகிறது
நம்பிக்கை

■

நம்பிக்கை உதிர்கின்ற போதுதான்
நிகழ்கிறது
முதல் மரணம்

■

நிலம் உழுகின்ற
உழவனைகிழித்து விடுகிறது
சமூக ஏர்

■

பூமிக்கு மேல்
புதை குழி
கட்டில்

■

உழவனை
நிமிர்ந்து பார்க்க மறுக்கிறது
நெற்கதிர் கூட

■

ஏழையைச் சாப்பிட்டு
ஏப்பமிடுகிறது
சோறு

தேடியபோது காணாத உறவுகள்
தேடாமலே வந்துபோயின
நெல் அறுவடைநாள் ...

இறைவனை மன்றாடியபொழுது
வேண்டுதலை நிறைவேற்றினான்
கொலுசுச் சத்தங்களோடு...

கண்களிருந்தும் ஏனோ
பார்வை புலப்படுவதில்லை
வெளவால் ...

கண்களிலிருந்து வடிந்த கண்ணீரை
இருபுறமும் துடைத்துவிட்டன
என் கைகள் ...

எல்லா வளங்களிருந்தும்
மரங்கள் உயிரோடு கருகின
தொழிற்சாலை கழிவுகள்.

விருந்து முடிவுற்றதும்
உணவுகளை பரிமாறியது
காகங்கள் ....

இரவில் நகம்
வெட்டியபோது சிதறியது
அம்மாவின் ஞாபகங்கள் ...

பத்து மாத கர்ப்பிணிபோல்
குலுங்கலுடன் வந்தது
நகரப் பேருந்து...

தன்னுடைய நலனுக்காக
நிறம் மாறியது பச்சோந்தி
உறவுகள் ...

இறைவனை தேடிச்
சோர்வுற்று திரும்பினேன்
வழியில் என் தாய் ...

மணலும் சிமெண்டும்
சரியாக கலந்ததால் பூர்த்தியானது
சகோதர ஒற்றுமை ...

விவசாயி இல்லாததால்
குடும்பமே பட்டினி
வாடிய பயிர் ...

கரு. சரண் குமார்
திருமணவயல்

திடீர் காற்று
ஒன்றிரண்டு மிச்சமிருக்கின்றன
முருங்கைக் கிளைகள்!

இலை பூக்களோடு
அழகாய் இருக்கிறது
மரக்கதவு வேலைப்பாடு!

எல்லாம் ஒன்றுதான்
எரிந்தபின்
சந்தனம் சவுக்கு!

பூங்காவில் தனித்திருக்கிறேன்
ஊஞ்சலில் ஆடிவிட்டு வந்தமர்கிறது
மனம்.

மாறாமல் இருக்கிறது
கட்டிடமாகும் விளைநிலத்தில்
கண்ணேறு பொம்மை!

களம் முழுதும்
காய்ந்து கொண்டிருக்கிறது
வெயில்!

மரநிழல்
எனக்கு மட்டும் சிறுமழை
சிறகுலர்த்தும் சிட்டு!

கடவுளின் பரிசு
உருகிப்போனேன்
குழந்தையின் முத்தம்!

நினைவு திரும்பும் போர்வீரன்
துழாவி எடுக்கிறான் கையில்
இன்னொரு கையை!

குரைக்கும் நாய்
குழையும் பூனை
வாசலில் மீன்காரி!

எத்தனைக் குழந்தைகள்
கேட்க நினைத்து அமைதியாகிறேன்
சுத்தமாய்ச் சுவர்!

மணற் திருடன்
திறந்து வைக்கிறான்
தண்ணீர்ப்பந்தல்!

மகிழ்நன் மறைக்காடு

பழமொன்ரியு - இலக்கணம்

பழமொன்ரியு இலக்கணம்

சென்ரியு, லிமரைக்கூ வகைமையைத் தமிழிலக்கியத்திற்கு அறிமுகப்படுத்திய ஈரோடு தமிழன்பன் அவர்கள் அறிமுகப்படுத்தியுள்ள புதிய வகை இலக்கியம் பழமொன்ரியு ஆகும். 'ஒரு கூடைப் பழமொன்ரியு' என்னும் இந்நூல், தமிழ்ச் சென்ரியு வகைமையின் பிரிதொரு பரிமாணம் ஆகும். சென்ரியுவின் இலக்கணத்தையும் நம் தமிழ் இலக்கியங்களில் மரபு வழியில் வரும் பழமொழியையும் இணைத்து இந்த புதிய வகைமையை அறிமுகப்படுத்தியுள்ளார்.

சாலை இளந்திரையன் பழமொழிகளைப் பற்றி 'பழமொழிகளும் ஏனைய பாமரர் இலக்கியங்களும் அவைகளைப் படைத்து வழங்கி வந்த மக்களின் கருத்தோட்டத்தில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தி வந்துள்ளன. எனவே மக்களின் சமுதாய இயல், அரசு இயல், நீதிஇயல், மற்றும் மத இயல், கோட்பாடுகளைப் பற்றிய ஆய்வுக்கு இவைகளை விடச் சிறந்த சாதனங்கள் வேறு இல்லை.' சாலை (இளந்திரையன், சமுதாய நோக்கில் பழமொழிகள், ப.10.) என்று குறிப்பிடுகின்றார். எனவே மக்களின் சமூகம், நீதி, அரசு, மதம் சார்ந்த வரலாற்றை அறிந்து கொள்ள பழமொழிகள் உறுதுணை புரிகின்றன என்பதை அறிய முடிகின்றது.

பழமொழிகள் என்பன சமூக வரலாற்றைப் பிரதிபலிப்பன, மானுட அனுபவச் செறிவுகளும், பிழிவுகளும் வாழ்க்கை எதிரொலிப்புகளும் விமர்சனங்களும் கொண்டு மக்கள் பேச்சில் இடம் பெற்று மிகுந்த கவர்ச்சியும், சுவையும், ஈர்ப்பும் உடையனவாக விளங்குவன.

தமிழ்ப் பழமொழிகளுக்கு சென்ரியுத் தன்மை இயல்பாகவே உண்டு. ஆயின் பழமொழி என்னும் வரையரை தாண்டி இலக்கியப் படைப்பாகும் நிலைக்கு அவற்றை இட்டுச் செல்லும் முயற்சி பழமொழி நானூறுக்குப்பின் தொடரோட்டமாக இல்லாமற்போயிற்று. இப் பழமொன்ரியு நூலில், பழமொழிகள் சென்ரியுத் தன்மையில் இலக்கியத் தகுதியடைவதைப் படிப்பவர்கள் உணரலாம் என்கிறார் ஈரோடு தமிழன்பன் அவர்கள்.

ஹைக்கூவிலிருந்து வேறுபட்ட சென்ரியு மக்களின் அன்றாடமைகளோடு அணுக்கமான உறவுடையது. புலமையாளர்கள் மட்டுமின்றிப் பொதுமக்களாலும் படைக்கப்பட்டது பரிமாறப்பட்டது. ஹைக்கூவின் வடிவத்தை மட்டும் வைத்துக்கொண்டு மனம்போன போக்கில் கட்டற்ற உரிமைகளோடு கட்டப்பட்டு எங்கெங்கும் பரவிய ஒரு மக்கள் இலக்கியம் என்று சென்ரியுவைக் குறிப்பிடலாம். சாமுராய்கள், ஜென் துறவிகள், கவிஞர்கள் என்கிற தகுதித்தரம் படைத்தவர்களுக்காக, சென்ரியு காத்திருப்பதில்லை. என்றாலும், வடிவ வார்ப்புக்குத் தேவையான அளவுகூட ஜப்பானிய மொழியில் பயிற்சி இல்லாமல் சென்ரியுப் பக்கம் தலைகாட்ட முடியாது என்றும் தமிழன்பன் அவர்கள் சென்ரியுவின் கடினத்தையும் எடுத்துரைக்கின்றார்.

தமிழ்ப் பழமொழியும் ஜப்பானிய சென்ரியுக் கவிதையும் காதல் மணம் புரிந்து பெற்றெடுத்த கவிதைப் பிள்ளை பழமொன்ரியு என்று பழமொன்ரியுக்கான இலக்கணத்தை எடுத்தியம்புகின்றார் என்பதால், பழமொன்ரியுவின் இலக்கணமானது, ஜப்பானிய சென்ரியு கவிதையின் இலக்கணமும் நம் தமிழ்ப் பழமொழியின் அமைப்பும் இணைந்த வடிவம் என்பது பெறப்படுகிறது. நம் பழமொழி எவ்வாறு பழமொன்ரியுவாக்கப்பட்டுள்ளது என்பதைற்கு ஈரோடுத தமிழன்பன் அவர்கள் பின்வருமாறு விளக்கமளிக்கிறார்:

வேடிக்கையாய், விளையாட்டாய், கிண்டலாய், கேலியாய், சீண்டலாய் எழுதப்படும் சென்ரியுவில் பழமொழித்தன்மை, விடுகதை இயல்பு, அங்கதப் பாங்கு எல்லாம் இருக்கும். என்பதால், பழமொழிகளுக்கு ஒரு திருப்பம் கொடுத்து, ஒரு சிறு மாற்றம் கொடுத்து, அல்லது ஒரு பார்வைத் திரிபைப் புகுத்தி அவற்றுக்குப் புத்தொளி பற்ற வைக்கும் முயற்சியைப் பழமொன்ரியு நூலில் நிகழ்ந்துள்ளது என்னிறார். மேலும், கொஞ்சம் குத்தலாய், கொஞ்சம் குதர்க்கமாய், கொஞ்சம் தர்க்கமாய் பழமொழிகளை மாற்றிப் போட்டால் சென்ரியுவாக அவை சிலிர்க்கின்றன; சிந்திக்க வைக்கின்றன; சிரிப்பை அள்ளி வீசுகின்றன என்ற கூற்றை மனத்தில் நிறுத்தி நாமும் பழமொன்ரியுக்களைப் படைக்க வேண்டும்.

ஒரு கூடைப் பழமொன்ரியு கவிதைத் தொகுதியைத் தொடர்ந்து பல பழமொன்ரியு நூல்கள் தமிழ் இலக்கிய உலகில் பிறக்க உள்ளன. காரணம் தமிழ் நாட்டில் ஏறக்குறைய 10,000 பழமொழிகள் இன்றும் வழக்கில் இருக்கின்றன என்பதால் சாத்தியமே. தமிழ்ப் பழமொழிகள் போலவே, தமிழ்ச் சொலவடைகளும் விடுகதைகளும் சென்ரியுவாக மாறக் காத்திருக்கின்றன என்று தமிழன்பன் எடுத்துரைப்பதால் இன்னும் இரண்டு புதிய இலக்கிய வகைமைகள் தமிழ் இலக்கிய உலகம் பெற்றெடுக்க வாய்ப்புள்ளது. இம்முயற்சியையும் ஈரோடு தமிழன்பன் அவர்கள்தான் பிரசவிக்க வேண்டும்; முடியும். ஒரு கூடைப் பழமொன்ரியு நூலிலிருந்து சில பழமொன்ரியுக்கள்:

நீர் இடித்து நீர்விலகாது
நீருக்காக இடித்துக் கொண்டால்
மாநிலங்கள் விலகும்

தவிடு தின்னும் ராசாவுக்கு
முறம் பிடிக்கும் மந்திரி
பட்டினியில் சாகும் மக்கள்

பதவி திரண்டு வந்தபோது
ஐயோ! பாராளு மன்றம்
கலைக்கப்பட்டு விட்டதே

ஊர் என்றால் சேரியும் இருக்கும்
சேரி சீறினால், சேரி சீறினால்
அந்த ஊர் எங்கு இருக்கும்?



குட்டக் குட்டக் குனிபவன்
முட்டாள்; பார்த்துக்கொண்டே
போகிறவன் யார்? அயோக்கியன்.

நாய்வேசம் போட்டால் குரைக்கத்தான்
வேண்டும்; வேசம் போட்டுப்போட்டு
நாயே ஆகிவிட்டால்?

ஆறிலும் சாவும் நூறிலும் சாவும்
அம்மா வயித்திலே பொண்ணா
இருக்கையிலும்தான் சாவு!

பாத்திரம் அறிந்து பிச்சைப்போடு;
பிச்சை எடுக்க வைத்தவன் தலையில்
அந்தப் பாத்திரத்தைப் போடு.

உப்பைத் தொட்டுக்கொண்டே
உரலை விழுங்கியவன்; ஊறுகாய்
தொட்டுக்கொண்டு, எதை விழுங்குவான்?

பழகப் பழகப் பாலும்
புளிக்கும், பழகாமல் இருந்தால்
எட்டி என்ன இனிக்குமோ?

ஒருநாள் கூத்துக்கு மீசையை
எடுத்தவன் மறுநாள் கூத்துக்கு
மீசையை வரைந்தான்.

மணலைக் கயிராய்த் திரிக்கிறது;
வானத்தை வில்லாய் வளைக்கிறது;
தேர்தல் அறிக்கை சரியாய் இருக்கும்.

பெண் என்றால் பேயும் இரங்கும்
ஆனால் ஆண்பேய் என்றால்
இரங்கவே இரங்காது எப்போதும்.

ஆக வேண்டும் என்றால் காலைப்பிடி
ஆகாதென்றால் கழுத்தைப் பிடி
இரண்டும் இல்லையா ஓட்டம் பிடி.

ஏழைக்கேற்ற எள் உருண்டை;
எப்போதும் எள் உருண்டையே தின்ன
ஏழை என்ன கோழையா?

பழமொழிகள் சமுதாயத்தைச் செம்மைப்படுத்துபவை, தவறுகளைச் சுட்டிக்காட்டி, திருத்தும் தன்மைகொண்ட பழமொழிகளில் சென்ரியு

தன்மையை ஏற்றி சென்ரியுவின் தனித்தன்மையான நகையுணர்வை மேலும் கூட்டி நாமும் பழமொன்ரியு கவிதைகளை சிறப்பாகப் படைத்து தமிழ் இலக்கிய உலகிற்கு அளிப்போம்.

ஈரோடு தமிழன்பன் - ஒரு கூடைப் பழமொன்ரியு

பாப்லோ பாரதி பதிப்பகம்
95,2 ஆம் முதன்மைச் சாலை
போரூர்த் தோட்டம் 2 ஆம் கட்டம்
சென்னை 600 095



*காவல்பொம்மை தலையில்
கூடுகட்டுகிறது
கதிர்திருடும் குருவி*

*பக்கத்து வீட்டாரையும்
அறிமுகப்படுத்தியது
மின்தடை*

*வீட்டுப்பாடம்
எழுதுவதே இல்லை
விடுதி மாணவி*

*எரிந்தப் பின்னும்
உயிர்த்தெழுந்தது
மருதாம்பு*

*திண்ணைகளற்ற
மாடி வீடுகளாயின
மனங்கள்*

*மழையின் வருகையை
தடுத்து விட்டன
கோடரி காம்புகள்*

*ஆணிவேரும்
முடங்கிப் போகிறது
தொட்டிச்செடி*

*தாலாட்டு
கேட்க முடியவில்லை
முதியோர் காப்பகம்*

*மணக்கவில்லை
சாதி மல்லி
ஊர்க் கட்டுப்பாடு*

*காற்றில் சலசலக்கிறது
போதி மரம்
அமைதியாய் புத்தர்*

ஹைக்கூ புதுவைக் குமாரி

ஜென் ஊடாக

ஹைக்கூ



இந்த உலகில் உள்ள மூன்று பிரதான மதங்களினூடாக மூன்று தத்துவங்கள் மக்களை நல்வழிபடுத்தும் நோக்கில் தத்தமது பிரயாணத்தை ஆரம்பித்தன. அந்தவகையில் இந்து மதத்திலிருந்து மாயா தத்துவமும், இஸ்லாம் மதத்திலிருந்து சூபியிசத் தத்துவமும், பௌத்த மதத்திலிருந்து ஸென் தத்துவமும் வெளிப்படுத்தப்பட்டன. ஸென் மேற்கூறிய மூன்று மதங்களின் தத்துவங்களையோ, செயற்பாடுகளையோ அல்லது அவற்றின் போசகத்தன்மைகளையோ பரப்புரைகளையோ குறிப்பதாக இல்லை. இன்னும் சொல்லப்போனால் இவை தத்துவங்கள் அவ்வளவுதான். அந்தவகையில் ஸென் தத்துவம் புத்த மத துறவிகளினால் உருவான ஒரு தத்துவம் என பொதுவாகவும் மேலோட்டமாகவும் சொல்லிக்கொள்ளலாம்.

ஸென் பற்றி அறியும் முன் ஸென் என்பதன் சொல்லுக்கான பத விளக்கம் பெறுவது அவசியமானது. அந்தவகையில் 'ஸென்' என்னும் சொற்பதம் தியானம் என்னும் சமஸ்கிருத மொழியின் திரிபாகக் கருதப்படுகிறது. சமஸ்கிருதத்தில் உள்ள ஒரு சொல் தியானா என்பதாகும். இச்சொல் பாளியில் ஸானா என வழங்கப்படுகிறது. 'ஸானா' என்னும் இச்சொல் சீனாவில் ஸான் என்றும் ஜான்-னா என்றும் மருவி பின் ஜப்பானுக்குள் நுழையும் போது இச்சொல் ஸென்னோ எனவும் ஸென்னா எனவும் திரிவுற்று இறுதியில் ஸென் என வழங்கப்படும் நிலைக்கு வந்துவிட்டது. தியானத்தின் கருத்தையே மேற் குறிப்பிட்ட சொற்கள் யாவும் உணர்த்துகின்றன.

தற்காலத்தில் தமிழில் ஸென் என்னும் சொற் பதத்தை ஜென், சென், யென் என்றெல்லாம் எழுதும் உச்சரிக்குக்கும் போக்கு உள்ளது.

ஜென்னின் தோற்றம்

ஜென் என்பது தனியாக கிளர்த்தெழுந்த ஒரு மதமோ தத்துவமோ கிடையாது. உண்மையில் இது இந்தியாவில் தோன்றிய பௌத்த மதத்தின் ஆணி வேரே. கி.மு 6ம் நூற்றாண்டில் தோன்றிய மதமாக கருதப்படும் பௌத்தம் அதற்கு முன்பு கூறப்பட்டு வந்த மதங்களின் போலித்தன்மைகளை நிராகரிப்புச் செய்யும் மதமாக தோன்றி அவற்றின் கட்டுக்களில் இருந்து மக்களை விடுவிக்க முற்பட்ட மதமாக பௌத்தம் கருதப்படுகிறது. இம்மதம் இந்தியாவிலிருந்து சீனாவுக்கு பிரயாணம் செய்தது. சீனாவில் உள்ள சவோலியன் கோயிலில் சொற்களில் ஏந்திய மதநூல்களின் போசகத்தன்னைக்கு புறம்பான அறிவினை கற்பிப்பதற்காக புத்தமதத் துறவியாக மாறிய தென்னிந்தியாவைச் சேர்ந்த பல்லவ இளவரசனான போதிதர்மனால் கி.பி 516 ல் தொடங்கப்பட்டு அவரது துறவியான ‘சட்டோரி’ என்பவரால் ஜென் (தியான மார்க்கம்) சீனாவிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. ஜென் பௌத்தத்தின் இரு பிரிவில் ஒரு பிரிவான மகாயானத்தின் பிரிவாக இருந்து பின் தனியான பௌத்த மத பிரிவாக மாறியதாக கி.பி 7ம் நூற்றாண்டின் பதிவுகளில் காணப்படுகின்றன. மகாயானத்திலிருந்த பல்வேறு சிந்தனை போக்குளின் கலவையாக ஜென் பௌத்த மதம் உருவானதாக சொல்லப்படுகிறது. ஜென் சீனாவிலிருந்து வியட்நாமிற்கும், கிழக்கு கொரியாவுக்கும், ஜப்பானிற்கும் பரவியது. ஜப்பானிற்கு இய்சாய் (1141-1215), டோகன் (1200-1253) போன்றோரின் முயற்சியால் ஜென் புத்த மதமாக கொண்டு வரப்பட்டது.

இங்கு ஜென்னின் விளக்கத்தை அறியும் முன் பௌத்தின் மைய உண்மையை அறிவது தேவைப்பாடானது. பௌத்தம் என்பது ஒரு மனிதன் சக மனிதர்களோடு சேர்ந்து வாழ்வதற்காக வகுப்பட்ட நன்னெறியே பௌத்தமாகும். இந்நெறி ஐந்து வகை ஒழுக்கத்தையும், எட்டு வழி மார்க்கத்தையும், நான்கு உண்மைகளையும் பத்து நெறிகளையும் அடிப்படையாகக் கொண்டது.

ஐந்து வகை ஒழுக்கம்

1. பொய் சொல்லாமை
2. திருடாமை
3. வீண் கொல்லாமை
4. கள்ளுண்ணாமை
5. கூடா ஒழுக்கம் மேற்கொள்ளுமை

எட்டு வழி மார்க்கம்

1. நன் நோக்கு - (சரியாகப் புரிந்து கொள்ளுதல்)
2. நற் கருத்து - (சரியான சிந்தனை)
3. நல் வாய்மை - (சரியான பேச்சு)
4. நற் செயல் - (சரியான செயல்)

5. நல் வாழ்க்கை - (சரியான வாழ்க்கை)
6. நன் முயற்சி - (சரியான முயற்சி)
7. நற் கடைபிடி - (சரியான மனது)
8. நல் அமைதி - (சரியான கவனம்)

நான்கு உண்மைகள்

1. வாழ்க்கை துக்கமானது
2. துக்கத்திற்கான காரணமிருக்கிறது
3. துக்கத்திற்கான நிவாரணம் இருக்கிறது.
4. துக்கம் நீக்கம் பெறுகிறது.

பத்து நெறிகள்

1. ஒழுக்கம்
2. பிறர் தேவைக்கான தானம்
3. விருப்பு வெறுப்பற்ற தன்மை
4. துன்பத்திலும் இன்பத்திலும் சுயக்கட்டுப்பாடு
5. விடா முயற்சி
6. சகிப்புத் தன்மை
7. வாய்மை
8. உள்ள உறுதி
9. அன்பு
10. மைத்திரி (உயிர் வாழ்வன அனைத்தின் மீதும் அன்பு கொள்ளல்)

மேற் சொன்ன பௌத்தத்தின் சாரங்களுக்கும் ஜென்னுக்கும் நெருக்காமான தொடர்பு உண்டு. இன்னும் சொல்லப் போனால் இவை நகமும் சதையும் போல் பிணைக்கப்பட்டவை. இதனை இந்து தத்துவ மரபில் ஒப்பீடு செய்து பார்க்கையில் இந்து தத்துவ மரபின் கர்மயோகம், ஞான யோகம், பக்தி யோகம் என்ற மூன்றில் நாம் ஜென்னை ஞான யோகத்தில் அடையாளப்படுத்தி பார்க்கலாம்.

ஆன்மீகம் என்பது ஒரு தனிமனிதன் தன்னை அண்ட வெளியுடன் (பிரபஞ்சத்துடன்) இணைக்கும் புள்ளியை உணர முற்படும் முடிவில்லா தேடலாகும். இத் தேடல் பொறிமுறையை ஜென் எத்துணை வரம்புமின்றி அடையவே முற்படுகிறது. இந்த இடத்தில் ஜப்பானிய சிந்தனையாளர் சுயிகியின் ஜென் தொடர்பான கருத்துக்கள் முக்கியமானவை. ஜென் எல்லா சடங்குகள், சொர்க்கம், நரகம் என்னும் உருவாக்கங்கள் எல்லாவற்றையும் நிராகரிப்பதாக தன் கருத்தை முன் வைக்கிறார். ஜென்னில் வழிபாட்டிங்களில் உள்ள கடவுள்களின் சிலைகள் வெறும் காட்சிப் பொருள்களே. மதங்கள் உருவாக்கிய எந்த கோட்பாட்டிற்கும் சம்பிரதாயங்களுக்கும், அவை சார்ந்த பிரயோகங்களுக்கும் ஜென்னில் இடமில்லை. கடவுளை நோக்கி நீ செல்ல வேண்டுமென்றால் உன்னையே நீ ஆழ்ந்து அகழ்ந்து உன்னையே நோக்கி நகர்ந்து கொண்டிரு என்று

ஜென் சொல்கிறது. இதை சுயம் தேடும் பார்வைக் கோணத்தில் பார்த்தால் அது தவறான பார்வையே. ஓஷோவின் கூற்றுப்பிரகாரம் காணமல் போன மூக்குக்கண்ணாடி தன் மூக்கின் மேல் இருந்து அதை கண்டுகொள்வது போன்ற உணர்வே ஜென் என்கிறார். இதன் மெய்யான பொருள் நீ உன்னை தியானத்தின் வாயிலாக தேடி அடை என்பதுதான். தன்னிலிருந்து புறவயமான அனைத்தினையும் ஜென் ஆன்மீகத்துக்கு அன்னியமானதாக பார்க்கிறது.

'மனதைக் கொன்றொழி' என்னும் ஜென்னின் மேலோட்டமான கருத்தினை துருவிப் பார்க்கையில் ஜென் தொடர்பான புரிதல் சிக்கல்களின் இருன்மைத் தன்மை துலங்கும். இந்த உலகின் அலங்கார ஆசைகளுக்களுக்கும், அவை ஏற்படுத்தும் மாய நிகழ்வுகளுக்கும் எம் மனம் அலைக்கழிக்கும் போது நம்முள் பொதிந்துள்ள மெய்யான உருவில்லா அகப்பொருளை உணராமலே தொலைத்துவிடுகிறோம். ஜென் புறவயத்தின் திழைப்பால் தொலைத்த உண்மையான உன்னை தேடிக்கொடுக்கிறது. அனைத்தும் அறிந்த நிரம்பல் நிலையை உடையவரையே நாம் சிறப்புடையவர் என்கிறோம். ஆனால் இதற்கு ஜென்னோ அடிதலை மாற்றிச் சொல்கிறது. காலியான பாத்திரத்தில் தான் எதையாவது ஊற்றவியலும் அதுபோலத்தான் வெறுமையான இடைவெளிகளால் நிரம்பிய மனதினை உடையவரிடமே உண்மையை உணர்த்தவும் அதனை உள் தரிப்பு செய்யவும் இயலுமென்கிறது ஜென். வெறுமை என்பது இங்கு முற்றிலும் வெறுமை என்ற பொருளில் கையாளப்படவில்லை. நம்மைச் சுற்றி அகவுலகு, புறவுலகு என்னும் இரு-விதமான தன்மைகள் உள்ளன. புற உலகம் என்பது போலித்தன்மைகளை உடைய நாம் அறிந்தே உலகை குறிக்கிறது. அக உலகம் என்பது அனுபவம். இந்த அனுபவத்தளத்தை ஜென் என்னும் ஆழ் தியானத்தின் மூலம் தொடுகை செய்யலாம்.

ஜென் கூறும் தியானம்

ஜென் சொல்லும் தியானம் என்பது கால்களை மடக்கி இருத்தி மனத்தை ஒரு நிலைப்படுத்தி இருப்பதல்ல. மாறாக அது ஜென் வாழும் போது அனுபவிக்கும் செயல் முறையின் உள்ளார்ந்த ஈடுபாட்டையே அது தியானம் எனச் சொல்கிறது. இன்னும் சொல்லப் போனால் நம் செயல் வடிவிலான அனுபவத்தளத்தினூடாக நம்மை நமக்கும் உலகிற்கும் அறிமுகம் செய்து வைக்கிறது. ஜென்னை பொறுத்தவரை தியானம் என்ற ஒன்று பிரத்தியேகமா இல்லை. ஏனெனில் ஜென்னே தியானமாகும். நாளும் நாம் ஆற்றும் கருமங்களின் வாயிலாக தியானம் மேற்கொண்டு ஜென்னினை அனுபவவிக்கலாம். நடப்பது, பேசுவது, கேட்பது, உண்பது, உறங்குவது, புன்னகைப்பது, நீராடுவது, தொழிலாற்றுவது, பூஞ் செடியை கத்தரிப்பது, பராமரிப்பது, பிரயாணம் செல்வது என நிகழும் நமது அனைத்து செயல்களையும் விருப்போடும் நிதானமானதாகவும் பக்குவமாகவும் அர்ப்பணிப்போடும் அதை ரசித்து ஆன்ம திருப்தியோடும், கண்ணியத்தோடும் நீ நீயாக இருந்து அந்த கனப்பொழுதை ரசித்து சுவைத்து வாழும் நிலையே ஜென் தியானம் ஆகும். இந்த தியான நிலையில் எது எப்படி கிடைக்கிறதோ அதை விருப்போடு ஏற்று உன்னுள்

உள்வாங்கு. அது எந்த நிலையாயினும் அதனை ரசிக்கத் தவறாதே என ஜென் உணர்த்துகிறது. இதனை ஒஷோ பின்வருமாறு சொல்கிறார்.

> ‘தத்துவம் என்பது பார்ப்பது,
> ஜென் என்பது பங்கு கொள்வது’

ஜென் நம்முள் உறங்கு நிலையில் உள்ள ஞானத்தை உசுப்பி எழுப்புகிறதே தவிர மாறாக அது யாரையும் ஞானியாக மாற்றுவது இல்லை. ஜென்னை பொறுத்தமட்டில் இவ்வுலகில் எவரும் புத்தனாக வேண்டுமென்றில்லை. எனென்றால் புத்தன் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்று சொல்கிறது ஜென். எப்படியென்றால் நாமே ஒரு புத்தர் தான். நமக்குள் புத்தன் இருக்கிறான் அதை நாம் வெளிப்படுத்துவதில்லை. ஜென் அதை வெளிப்படுத்த முனைகிறது.

> ‘‘விலகியிரு
> உலகம் உன்னுடையதே
> ஊனுக்குள் ஒரு புத்தன்’’
> (புனான்-ஜென் ஹைக்கூ)

மேலே குறிப்பிட்ட ஜென் ஹைக்கூ செல்வது என்னவென்றால் முதலில் உன் உடலுக்குள் இருக்கும் புத்தனை கண்டுபிடி அப்படி நீ கண்டுபிடித்தால் இந்த உலகம் உனதானதே. கண்டு பிடிக்க போலியும், பொய்மையும், பொறாமையும் சூழ்ந்த இந்த புறவுலகை விலக்கும்படியாக மேற்குறிப்பிட்ட ஹைக்கூ வலியுறுத்துகிறது.

ஜென்னின் உன்னதமான பண்புகள்

பக்குவப்பட்ட மனத்தின் அனுபவத்திரளால் எழும் உணர்வின் படிநிலை ஜென் ஆகிறது. ஜென் மனிதனது ஆன்ம உணர்வாகும். (Zen is the spirit of a man) ஜென் உட் தூய்மையையும் நற் தன்மையையும் நம்புகிறது. ஜென் தன்னை எவரிடமும் எந்த எழுத்துரு கொள்கையோ, அல்லது வாய்வழிக் கொள்கையோ மனிதனிடத்து திணிப்பதில்லை. தவிர இதை செய், அதை செய் அப்படி நட, இப்படி நட, குறித்த ஒன்றையே பின்பற்று என்றெல்லாம் ஜென் எப்போதும் திணிப்பதில்லை. ‘நீ நீயாக இரு’ இதைத் தவிர வேற எந்த போசகமும் ஜென்னிடம் இல்லை. ஜென் என்பது மதங்களுக்கு அப்பாற்பட்ட உன்னதமான உணர்வு. மத நோய் பிடித்தவர்கள் ஜென்னினை உணர்ந்தால் அது அவர்களுக்கு நல் மருந்தாகும். ஜென் தன்னை பௌத்தத்தின் உயிராக இருப்பினும் அது அனைத்து மத, தத்துவங்களின் ஆன்ம வடிவாகும்.

ஜென் அழகியல், ஆனந்தத்துடான ஒரு அற்புதமான உணர்வு நிலை. இந்த உணர்வில் எந்த சுமையுமில்லை. இன்னும் சொல்லப்போனால் இது சுமைகளை இறக்கும் அனுபவ தியானமாகும். ஜென் பட்டாம்பூச்சிக்கு ஒப்பானது அதற்கு பறப்பது மாத்திரமே நோக்கல்ல. இயற்கையின் நிரல்படுத்தலில் உள்ள சீரான அனுபவிப்பை ஏற்க, பிரயோகிக்க ஜென்

நமக்கு கற்றுத்தருகிறது.

ஜென் மனிதனது ஜனனத்தையும் மரணத்தையும் நிகராக காண்கிறது. இரண்டு மீ அழகானவை. இந்த முழு அண்டமே அழகானது அதில் நாம் ஜனிப்பதும் அழகு அதுபோல் மரணிப்பதும் அழகு உயிரின் தற்காலியத் தன்மை காலியாக முன் அழகை ரசித்துவிடு என்கிறது ஜென்.

''விடை பெறும் இலை
ரகசியம் சொல்லிச் சென்றது
மரணத்துக்குரியதான''
(லிப்னானி-சுபிபோதகர்)

இந்த ஹைக்கூ ஒவ்வொரு மனிதனின் பிறப்பு நிச்சயமோ, இல்லையோ ஆனால் இறப்பு நிதர்சனமானது எனச் சொல்கிறது.

மற்றும் ஜென் நிலை என்பது அளவிட முடியாத ஒன்று அது வற்றுவதுமில்லை நிரம்பி வழிவதுமில்லை . ஜென் என்றும் ஒரே நிலையில் தான் இருக்கிறது. இதுதான் ஜென்னிற்கான திட்டவட்டமான வரைபிலக்கணம் என யாராலும் கூறவியலாது. ஏனெனில் அது சட்டகத்துக்குள் உட்பாட வாழ்வின் அனுபவ தியானம். இங்கு ஒவ்வொருவரின் வாழ்வும் அனுபவமும் ஒரே மதிரியாக அமைவதில்லை.

ஜென் ஒன்றின் இழப்பால் வரும் இடை வெளியை இன்னொர் தரிசனத்தின் வாயிலாய் நிரப்பும் தன்மையை உடையது. இதனை ஜப்பானிய கவிஞர் மோரிடாகேவின் பின்வரும் சென் ஹைக்கூ தெளிவு படுத்தும்

உதிர்ந்த பூ
கிளைக்கு திரும்புகிறதோ?
வண்ணத்துப்பூச்சி
(மோரிடாகே)

இங்கு உதிரும் பூவின் வெற்றிடத்தை மோரிடாகே வண்ணத்துப்பூச்சியினால் நிரப்பி அதன் பின்வரும் எதிர்கால வசந்த அழகையும் முன்னறிவிப்பு செய்துள்ளார்.

ஹைக்கூவுக்குள் ஜென்னின் பரவல்

ஜென் தத்துவம் விளக்க தனியான நூல்களோ , ஜென் குறித்த வியாக்கியானங்களோ எதுவுமில்லாதபோதும் இது எவ்வாறு மக்களிடத்து சென்றடைந்தது என்பது சிந்திக்க வேண்டிய விடயமே. ஜென் தத்துவத்தை உணர்ந்து அதனுள் உறைந்த தத்துவ ஞானிகளின் வாழ்க்கை அனுபவத்தில் இடம் பெற்ற சம்பாஷணைகளினதும், நிகழ்வுகளினதும் கதைகள் மூலமாகவும், அத் தத்துவ ஞானிகளின் ஜென் கவிதைப் படைப்புக்களாலும், ஜென் பழமொழிகளாலும் ஜென் தத்துவம் உலக மக்களிடத்து போதிக்கப்படுகிறது. ஜென் கவிதைகள் என்னும் போது

ஹைக்கூ கவிதைகளும் இதில் பெருமளவு பங்கினை செய்து வருகிறது. ஜென் தத்துவம் என்பது வாழ்வின் குறிக்கோளற்ற தன்மையாகும். எதனையும் அப்படியே சொல்லிவிடு என்பதாக அமைகிறது.

காட்டுவாத்துக்குத் தன் நிழலை
நீரில் பதுக்கும் நோக்கில்லை
அதன் உருவத்தைப் பிரதிபலிக்கும்
எண்ணம் நீருக்கு இல்லை

இந்த ஜென் தத்துவத்தின் மூலத்திலிருந்தே ஹைக்கூவிற்கான அடிப்படை வியாக்கியானம் எழுகிறது. ஜென் சீனாவிலிருந்து தோற்றம் பெற்றாலும் ஹைக்கூ ஜப்பானிலிருந்தே தோற்றும் பெற்றது.

எடோ காலத்திலே பூரணமான ஹைக்கூ வடிவம் தோற்றம் பெற்றாலும் முரோ மொச்சி (1333-1603) காலத்திலும் ஹைக்கூ சாரங்களை காணலாம். எடுத்துக்காட்டாக

உலகம் நகரும்
துறலின் கூரையாக
பார்த்துக்கொண்டிரு

கி.பி 1471ல் எழுதப்பட்ட இக் கவிதையில் ஹைக்கூ தன்மைகளை காணலாம். இந்த கவிதை எதிலும் சாட்சியாய் இரு என்னும் ஜென் நிலையை சொல்வதாக உள்ளது. எடோ காலம் (கி.பி 1603-1863 வரை) இக்காலத்தில் தான் சீன ஜப்பான் மொழிக் கலவையாக ஹைக்கூ கவிதை தோன்றியது. மூன்றே மூன்று அடிகள் 5,7,5 என்ற அசை அமைப்பில் அமைந்தது. எடோ காலமே உண்மையில் ஹைக்கூவுக்கு முதன்மை அளித்த காலமாகும். இக்காலமே பெரும்பான்மையான ஹைக்கூ கவிஞர்களை அளித்த காலமும் ஆகும்.

ஜென் தத்துவ ஞானிகளும் கவிஞர்களும் தங்களின் வாழ்க்கையோடு ஒன்றித்து தங்களின் கவிதைகளை படைத்தார்கள். அவர்கள் இயற்கையின் ஆச்சரிய, சாதாரண தரிசனங்களோடு தம்மை கலந்தார்கள். எல்லாம் அதனதன் இடத்தில் மிகச் சரியாகவே உள்ளது என்பதே ஜென்னின் தத்துவமான தரிசனமாகும். ஆனால் அந்த இயற்கைக்குள் நுழையும் ஒரே வழி ஆழ்ந்த ரசிப்பு மாத்திரமே.

ஜென் ஹைக்கூவில் பௌத்த மதத் துறவிகள் மனத்தின் மீதான அக-விசாரிப்புக்களையும், இயற்கை தரிசனங்களில் உறைந்துள்ள ஞானத்தின் துலங்கல்களை பதிவு செய்தார்கள். மனிதனின் மனமும், மௌனமும் இடைவிடாது இந்த சமூகத்தோடு பேசும் இத்தகு சிந்தனையாக்கத்தின் மீதான ஜென் முகிழ்வே ஹைக்கூ.

ஜப்பானிய ஜென்னில் மூங்கிலைப் பற்றி அறிவதானால் மூங்கிலாக மாறு. தேவதாருவைப்பற்றி அறிவதானால் தேவதாருவாக மாறு என்னும் கருத்துள்ளது. ஜப்பானிய மொழியில் உள்ள ''நரநள''

என்னும் சொல்லுக்கு ஒன்றினுள்ளே நுழைந்து அதற்குள் இருப்பதை வெளிக்கொணர்ந்து அதற்கு இலக்கிய வடிவம் கொடு என்னும் பொருளுண்டு.

அவ்வாறே ஜென் துறவிகள் தாங்கள் காணுற்ற இயற்கையின் தரிசனங்களை தமது ஹைக்கூ படைப்பின் வாயிலாக வெளிப்படுத்தினர். அவர்கள் தத்தமது தரிசனப்பதிவுகளை ஹைக்கூவாக ஆக்குவதற்கு அவர்கள் பல காலங்கள் பல நெடுதூரபயணங்களை மேற்கொண்டார்கள். அதன் மூலமாக தாம் ரசித்து அனுபவித்தவற்றை ஹைக்கூவாக படைத்தார்கள்.

அழகிய பொருட்கள், சம்பவங்கள் நிலையற்றவை
கனத்தில் மின்னி மறையக்கூடியவை
ஆனால் அழகு என்னும் தத்துவம் நிரந்தரமானது.
(ஜென் தத்துவம்)

மேற்குறித்த தத்துவத்திற்கு இயைபாக அவர்கள் இயற்கையின் அழகில் இருண்மைப் பட்டிருக்கும் ஜென் ஞானத்தை மறைமுகமாக இயற்கையின் படிம நிலையினூடாக வெளிப்படுத்தினர். இவ்வாறு அவர்கள் தமது ஹைக்கூ பதிவுகளை மேற்கொள்ளும்போது வாசகர் பரப்பிலிருந்து வரும் எத்தகைய சிந்தனை எதிர்பார்ப்பையும் எதிர்பார்த்து அவர்கள் ஹைக்கூவை ஆக்குவதில்லை. அவர்களின் நோக்கம் தம் அனுவப தரிசனத்தை மாத்திரம் வெளிப்படுத்துவதே. அதற்கு பின் அதனுள் உறைந்திருக்கும் ஜென் மெய்நிலையை தேடும் பொறுப்பை வாசகரிடம் ஒப்படைத்திருக்கிறார்கள்.

ஹைக்கூ பற்றி பேச வந்த பாரதி

''கவிதை எழுதுபவன் கவியன்று
கவிதையே, வாழ்க்கையாக உடையவன்
வாழ்க்கையே கவிதையாகச் செய்தோன் அவனே கவி''

என்கிறார். இவரது கருத்தின்படி கவிஞனின் வாழ்வியலின் அனுபவ மனநிலைகளே கவிதையாகச் சொல்லப்படுகிறது. இதனையே ஜப்பானிய ஹைக்கூவாளர்கள் செய்தார்கள். அவர்களின் சொந்த அனுபவ தளத்திலே ஹைக்கூ எழுந்தது. இதனை ஜட்டோ ஜின் சாய் (1627-1705) அவர்கள்

''ஜப்பானிய கவிதையானாலும் வேறு எம் மொழிக் கவிதையானாலும் கவிதையை புரிந்து கொள்ளல் என்பது கவிஞனை புரிந்துகொள்ளல் என்பதாகும்.''

எனக் கூறியுள்ளார். ஆகவே ஜென் ஹைக்கூவை புரிய அதைப்படைத்தவனின் வாழ்க்கை பின்புலம் புரிவது அவசியமானது. ஜென்னை அவன் வாழ்க்கையினூடாகவே உணர்த்துகிறான். அதற்கு ஹைக்கூ என்னும் உன்னதமான கவிதைக் கருவியை பயன்படுத்துகிறான். ஆனால் ஜப்பானியர்கள் ஹைக்கூவை கவிதையாக கொள்ளாது. மாறாக

அவற்றை ஜென் நிலைகுறிக்கும் கலைப் பொக்கிஷமாவே அவர்களால் உணரப்படுகிறது.

> ஹைக்கூவில் பொருளை தேடாதீர்கள்.
> உங்களைத் தேடுங்கள் நிச்சயம் கிடைப்பீர்கள்
> (தமிழன்பன்)

இங்கு தமிழன்பன் அவர்கள் ஹைக்கூ எழுதுவோனையும் வாசிப்போனையும் தன்னை தேடும் முறைமையாகவும் பொருளை புனைந்து ஹைக்கூ படைக்க வேண்டாமெனவும் சொல்லியுள்ளார். இவ்வாறான இந்த கருத்தாக்கம் ஜென்னின் மூல தத்துவமே.

அன்பு, காருண்ணியம், தான அளிக்கை, மனசுத்தி, இயற்கையை நேசித்தல் போன்றவற்றை உன்னுள் உள்வாங்கி வரவேற்கும் ஆழ்நிலை தியானம் ஹைக்கூவின் ஜென் நிலையாகும். ஹைக்கூ இயற்கையை பாடுவதுபோல் வெளித் தோற்றமளித்தாலும் அது மனிதனை பகுத்தறிவிலிருந்து அப்புறப்படுத்தி ஆறாம் அறிவையும் தாண்டி பிறிதொரு அறிவை மனிதனுக்கு வழங்கக்கூடிய மகத்துவமிக்க ஜென்னின் தொடர்ச்சியாகும்.

பா.தா
(ராஜன், மகிழூர், மட்டக்களப்பு)

ஹைக்கூ

சிறகுவிரித்தேன்
பறக்கமுடியவில்லை
பழகிப்போனதுகூண்டு

நாவின் சுவைகூடியது
சுருங்கிக்கொண்டேபோனது
பனிக்கூழ்

களி மண்
பசி தீர்த்தது
விற்றுப்போன பானை

நின்ற சிலை
நகர்ந்தது
சாமி ஊர்வலம்

பரந்த நிலம்
ஊடுருவி சென்றது
வரப்பு

வகைவகையாய் உணவு
வாழையிலை பசிதீர்த்தது
முற்றத்தில் பசு

வில்லும்அம்பும்
பிரிந்தது
இலக்கு எட்டியது

பின்தொடர்ந்த நிழல்
ஒதுங்கி மறைந்தது
இருள்

பூத்த மலர்
கூந்தல் சேரவில்லை
சாதிப்பூசல்

விருந்தாளி
பலமான உபசரிப்பு
வாசலில் பென்ஸ் கார்

மாறன்
Pune

ஜகாத்

ஜி. ஆசிப் அலி, துபாய்

ஒவ்வோர் ஆண்டும் புனித ரமலான் மாதத்தில் தன்னுடைய சொத்து மதிப் பைக் கணக்கிட்டு அதிலிருந்து இரண்டரை சதவீதம் ஜகாத் என்னும் ஏழை வரியைச் செலுத்துவது முஸ்தபாவுடைய வழக்கம்.

வழக்கம்போல் இவ்வாண்டும் தன்னிடம் இருக்கும் தங்கம், வெள்ளி, வங்கி இருப்பு, நிலம் போன்ற இன்ன பிற சொத்துக்களின் மதிப்பை தற்கால மார்க்கெட் மதிப்புப்படி துல்லியமாகக் கணக்கிட்டு, மொத்த மதிப்பிலிருந்து இரண்டரை சதவீதத்தைத் தனியாகக் குறித்தான் முஸ்தபா. அது சரியாக இருபத்தைந்தாயிரம் ரூபாய் வந்தது.

“ஏங்க, இந்த வருடம் ஜகாத் பணத்தை யாருக்குக் கொடுக்கப் போறீங்க?” என்று கேட்டுக்கொண்டே தேநீர் கோப்பையைக் கொண்டு வந்து கொடுத்தாள் மனைவி முபீனா.

தேநீர் கோப்பையை வாங்கி உறிஞ் சிக்கொண்டே, “இந்த முறை முழு ஜகாத் தொகையையும் என் நண்பன் அஜீமுக்குக் கொடுக்க முடிவு பண்ணி இருக்கேன்.” என்றான் முஸ்தபா.

ஆச்சரியமாகி கணவனை ஏறிட்டாள் முபீனா.

“என்னங்க இது? வழக்கமா நீங்க ஏழைங்களுக்குத்தானே கொடுப்பீங்க? அதுவும் பணத்தைப் பிரித்துப் பல ஏழைங்களுக்குக் கொடுப்பீங்க. அப்படி கொடுக்கறதுல ஸவாபு இருக்குன்னு வேறே சொல்வீங்க. அப்படிப்பட்ட நீங்க ஏன் திடீர்னு இப்படி முழு பணத் தையும் ஒரே ஆளுக்குக் கொடுக்கிறீங்க? அப்படியே கொடுத்தாலும் உங்க நண்பர் ஒன்றும் அவ்வளவு ஏழை இல்லையே?” ‘பட,பட’வென பொரிந்தாள் முபீனா.

“நான் ஏன் இந்த வருடம் ஜகாத் பணத்தை அஜீமுக்கு வழங்கத் தீர்மானித்திருக் கேன்னா, அதில் ஒரு அர்த்தம் இருக்கு.”

குழப்பமாய் கணவனை நோக்கினாள்.

அவன் தொடர்ந்தான்.

“அஜீம் அவ்வளவு ஏழை இல்லைதான். அவன் எங்கிட்ட இருபத்தஞ்சாயிரம் ரூபா கடன் வாங்கி பல வருடங்களாயிருச்சு. அதை திருப்பிக் கொடுக்கிற நிலையில அவன் இல்லை. இதை பல தடவை என்னிடம் சொல்லி அவன் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறான்.”

இப்போது முபீனா குறுக்கிட்டாள்.

“நீங்க சொல்றது ஒண்ணும் புரியலையே? அவர் உங்களுக்கு ஏற்கனவே கடன் பாக்கித் தரவேண்டும். அப்படிப்பட்டவருக்கு நீங்க

கைக் கடிகாரம்
விட்டு விட்டு ஓடுகிறது
தவணை முறையில் வாங்கியது !

ஒத்தையடிப் பாதை
முள்ளைக் கண்டதும் தாண்டுகிறது
புதிய செருப்பு !

அதிகாலைப் பொழுது
கடலலையில் தள்ளாடுகிறது
இளஞ்சூரியன் !

காலைப் பனித்துளி
முழுமையாக நனைகிறது
தோட்டக்காரனின் பாதம் !

ரோஜா பூவின்மேல்
பறந்து வந்து விழுகிறது
என்னவளின் ஒற்றை முடி !

கவிஞர் பொ. பிரேம்குமார்

மேலும் ஜகாத் பணம் வழங்கப்போறீங்க. ஒரே குழப்பமா இருக்கே?"

லேசாய் புன்னகைத்த முஸ்தபா, "புரியும்படியா சொல்றேன். அஜீமால் அவன் எங்கிட்ட வாங்கிய கடனைத் திருப்பிக்கொடுக்க முடியலை. கஷ்ட ஜீவனம் அவனோடது. அவனுடைய நிலைமை இப்போது சரி இல்லை. அதனால இவ்வருட ஜகாத் பணத்தை அவனுக்கு வழங்கி அதை மீண்டும் அவனிடமிருந்து வாங்கிக்கொள்ளப்போறேன். அதனால, அவன் தன் கடனை அடைத்துபோல் இருக்கும், அதே சமயம் நான் என் ஜகாத்தை அளித் ததுபோலும் இருக்கும்." என்று விளக்கினான்.

"ஏங்க, ஜகாத் என்று சொல்லி கொடுத்தப் பணத்தை நீங்களே திரும்ப வாங்கிக்கொள்ளலாமா? இது எனக்குச் சரியாகப்படலையே? உங்க பணம் உங்களுக்கே வந்தடைந் தால் அது எப்படி ஜகாத் ஆகும்?"

"நீ கேட்பது நியாயமாகத்தான் தெரியுது முபீனா. எனக்கும் அப்படித்தான் தோணிச்சு. ஆலிம் ஒருவரிடம் கேட்ட பிறகுதான் நான் இந்த முடிவை எடுத்தேன்."

"ஆலிம் என்ன சொன்னார்?"

"வறுமை நிலையில் இருக்கும் நண்பருக்கு ஜகாத் வழங்குவதில் தவறொன்று மில்லை. அந்தப் பணத்தை அவருக்கு வழங்கிய பிறகு அது அவருக்குச் சொந்தமாகிவிடு கிறது. அவ்வாறு தனக்குச் சொந்தமாகிவிட்டப் பணத்தை அவர் விருப்பம்போல் அவர் செலவு செய்யலாம். அவர் பட்ட கடனை அந்தப் பணம் கொண்டு அடைப்பதன் மூலம். அவர் 'கடனாளி' என்கிற ஒரு நிலையிலிருந்து விடுபடுகிறார். மறுமையில் அவர் எந்தவித கடன் பாக்கியும் இல்லாதவராக இறைவன் முன் நிற்பார் என்று அந்த ஆலிம் விளக்கினார்."

"ஓ.. அப்படியா?"

"ஆமாம் முபீனா. என் பணம் என் நண்பனை அடைந்தால் அது ஜகாத் பணம். அது மீண்டும் திரும்பி என்னிடம் வந்தால் அது என் கடன் பாக்கி. கடனுக்கும், ஜகாத்துக்கும் வித்தியாசம் இருக்கே. அதுமட்டுமில்லை. அவன் அந்தப் பணத்தை என்னிடம் திருப்பிக் கொடுப்பதால் என்னிடம் இருபத்தஞ்சாயிரம் ரூபாய் இருப்பு சேர்கிறது. அதிலிருந்து இரண்டரை சதவீதம் கணக்கிட்டு வரும் பணத்தை நம்மப் பள்ளிவாசல் ஏழை மோதினாருக்குக் கொடுக்கலாம்னு இருக்கேன்."

முஸ்தபா சொன்ன அனைத்து விளக்கங்களையும் கேட்டுத் தெளிந்த முபீனா, "நீங்க எதைச் செய்தாலும் யோசித்துத்தான் செய்யறீங்க." என்றவாறு மகிழ்ச்சியுடன் பெரு நாளைக் கொண்டாடும் ஆயத்தங்களை மேற்கொள்ள ஆரம்பித்தாள்.

தேனிலவு

கும்பகோணம். நௌஷாத் கான். லி

ஊட்டியில் தேனிலவு கொண்டாடுவதற்க்காக புது மண தம்பதிகளான கவிதா முரளி சென்றனர். எல்லா ஆண்மகனும் ஆசையுடன் எதிர் பார்க்கும் நாள். முரளிக்கு எத்தனை கனவுகள்,கற்பனைகள் பறவையை போல் அவனது மனம் சிறகடித்துபறந்தது.

பகல் பொழுது முடிந்து இருள் சூழ தொடங்கியது பாத்ரூமில் குளித்து கொண்டு இருந்தாள் கவிதா.அறைக்கு வர போகின்ற மனைவியிடம் என்னென்ன பேசலாம் எப்படி தொடங்கலாம் என்று குழப்பத்தில் தவித்து கொண்டு இருந்தான் முரளி. நண்பர்கள் கூறிய அறிவுரை இப்போது தான் அவன் நினைவுக்கு எட்டியது மச்சான் பாய்ந்திடாதே. புது பொண்ணுதப்பா நினைக்கும் என்றான் ஒரு நண்பன்... மச்சான் மண்ணு மாதிரியே இருக்காதே புது பொண்ணு பழம்னு தப்பா நினைக்கும் என்றான் இன்னொரு நண்பன் ஆளாளுக்கு ஒரு ஒரு அறிவுரையை சொல்லி குழப்பத்தில் ஆழ்த்திவிட்டார்கள். நான் இப்போ என்ன தாண்டா செய்யுறது என்ற டென்ஷனில் முரளியின் கால் ஆட்டோ மெட்டிக்காக நடுங்கிகொண்டு இருந்தது. எது எதுக்கோ டீச்சிங் / கோச்சிங் பண்றானுங்க இதுக்கு எவனும் சொல்லி தர மாட்றானே என ஃபீல்செய்து கொண்டு இருந்தான் முரளி.

கவிதா பாத்ரூமில் இருந்து டவலை கட்டி கொண்டு வந்தாள். மனைவியை கொஞ்சம் வெட்கத்துடன் பார்த்தான்... கொஞ்சம் தைரியத்தை வரவழைத்து கொண்டு புது மனைவியை செல்லமாக பேபிம்மா இங்கே வாடா? என்றான். கவிதாவும் வெட்கபட்டாள். இருங்க ஸாரி கட்டிக்கிட்டு வந்திடுறேன் என்றாள்..கொஞ்சம் என்கிட்டே பேசிட்டு போ அப்புறம் ஸாரிகட்டிகிலாம் என்றான்.

முரளி அருகே கவிதா நெருங்கினாள்... ஆசையுடன் புது மனைவியை முத்தமிட நெருங்கினான்.

டொக்.... டொக்..... டொக் (கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது)

மனைவி கவிதாவை உள்ளே போக

சொன்னான். நீ உள்ளே போ...மா ..நான் யாருனு பார்க்குறேன்.

கதவு திறக்க பட்டது.

மறுநாள்...

கவிதா அழுத கண்களுடன் போலீஸ் ஸ்டேசனில் புகார் தெரிவித்தாள்...என் புருஷன நேத்து நைட்ல இருந்து காணோம் சார். யாரோ கதவு தட்டும் சத்தம் கேட்டது திறக்க போனவர் தான் அதன் பிறகு அவரை காணவே இல்லை சம்பவம் நடந்த அந்த நேரமே அந்த பகுதி முழுதும் அந்த ஹோட்டல் ஆளுங்க கொண்டு தேடி பார்த்தேன் சார் . ஆனா, என் புருசன் கிடைக்கவே இல்லை. யாரோ என் புருஷன கடத்திட்டாங்கனு நினைக்கிறேன் சார் நீங்க தான் கண்டு புடிச்சு தரணும் அழுத கண்களோடு கம்ப்ளைண்ட் கொடுத்தாள்.

உங்களுக்கு யார் மேலாவது சந்தேகம் இருக்காமா என்று போலீஸ் கேட்டனர்... எனக்கு யார் மேலயும் சந்தேகம் இல்லைஎன்றாள். புகாரை பெற்று கொண்ட போலீஸ் திமிஸி பதிவு செய்தது.

கணவனோடு வந்த கவிதா தனியாக தன் தாய் வீட்டிற்க்கு சென்றாள். நடந்தவற்றை தன் குடும்பத்திற்க்கும், மாமியார் குடும்பத்திற்க்கும் சொல்லி அழுதாள்.

போலீஸ் விசாரணையில் முரளிக்கு எந்த வித கெட்ட பழக்கமும் இல்லை,தொழில் எதிரியும் இல்லை என்பது ஊர்ஜிதம் ஆனது.... இப்போது போலீசின் சந்தேகம் கவிதா மீது திரும்பியது. போலீஸ் கவிதாவிடம் பலவாறு கேள்வி கணைகளை கேட்டு அவளிடம் இருந்து ஏதாவது துப்பு கிடைக்குமா என பல வழிகளில் முயற்சித்தது ஆனால் எந்த வழியும் பிறக்கவில்லை. முரளி கடத்தல் தொடர்பான விசாரணை நடந்து கொண்டு இருக்கும் போதே அந்த அதிர்ச்சிகரமான செய்திபோலீஸ் அதிகாரிகளுக்கு எட்டியது. ஆம்...

முரளி கொடூரமாக கொலை செய்ய பட்டு மலை உச்சியில் இருந்து வீச பட்டு இருந்தான். எப்படியோ வேறொரு தற்கொலை கேஸ் விசயமாக போலீஸ் முறப்பட்ட போது விசாரணையில் முரளியின் உடல் யதர்ச்சையாக கிடைத்தது.

முரளியை கண்டிப்பாக காசுக்காக யாரும் கடத்த வில்லை. முன் பகை அல்லது பழி உணர்ச்சி காரணமாக தான் கடத்திகொன்று இருக்கிறார்கள் என்பது மீண்டும் ஊர்ஜிதம் ஆனது. இது கண்டிப்பாக முரளி தரப்பில் இருந்து யாரும் செய்து இருக்க வாய்ப்பில்லை ஏன் என்றால் முரளி கடத்த பட்ட சமயம் கவிதாவும் உடன் இருந்திருக்கிறாள் அவளை எதுவும் செய்யாமல் முரளியை மட்டும் கொண்டு போய் கொடூரமாக கொலை செய்து இருக்கிறார்கள் என்றால் இதில் கவிதாவுக்கும் சம்பந்தம் இருக்குமா என்ற ரீதியில் போலீஸ் விசாரிக்க துவங்கியது.

கவிதாவுக்கு திருமணத்திற்க்கு முன் ஏதாவது காதல் இருந்ததா அல்லது யார் மீதாவது அஃபேர் இருந்ததா என்ற ரீதியில்போலீஸ் விசாரித்தது ஆனால் போலீஸ் நினைத்தது

சருகுகளுக்குள்
சண்டை, வெகு அருகில்
காட்டுத்தீ..

***

குடிசைகளின் வெளிச்சத்தை
மறைத்து நிற்கின்றன
பங்களா சுவர்கள்..!

ஆ.மகராஜன்

போல எதுவும் நடை பெற வில்லை. மாறாக கவிதா ரொம்ப நல்லபொண்ணு, யார்கிட்டேயும் அதிகமா பேச மாட்டா, ஃப்ரென்ட் கூட ஒருத்தி மட்டும் தான். அவள தவிர யார்கிட்டேயும் அதிகம்ஒட்ட மாட்டா, படிப்புல கெட்டி, யார்கிட்டேயும் எந்த வம்பும் வச்சுக்க மாட்டா, எந்த பசங்ககளையும் நிமிர்ந்து கூட பார்க்கமாட்டா, ரொம்ப நல்ல பொண்ணு என்று எல்லோரும் கவிதாவை பற்றி நல்ல அபி ப்ராயங்களையே தெரிவித்தனர். போலீஸ்க்கும் எந்த வழியிலும் கொலைக்கான காரணம் கிடைக்க வில்லை, காரணம் கிடைத்தால் கொலையாளி தானாகமாட்டி கொள்வான் என்று போலீஸ் நம்பியது. எல்லோரும் கவிதாவை பற்றி நல்ல விதமாக சொன்னாலும் போலீஸ்க்குமட்டும் கவிதா மீதே சந்தேகம் வலுத்தது. இது போலீஸ்க்காரன் புத்தி இது யார் நினைச்சாலும் மாற்ற முடியாது. பலநேரத்துல போலீஸ்ஸ பத்தி தப்பா நினைப்போம் ஆனா பல சமயம் அவன் சந்தேகம் உண்மைனு ஊர்ஜிதம் ஆகும் போதுஊரே வாய்ல விரலை வச்சு வியக்கும்....போலீஸ் புத்தி கவிதா மீதே தப்பு இருப்பதாக உணர்த்தியது...ஆனால் எந்த விததுப்பும் காவல் துறை அதிகாரிகளுக்கு கிடைக்க வில்லை.. இன்றுடன் கவிதா தரப்பில் அடிக்கடி விசாரிக்கும் விசாரணையை முடித்து கொள்வோம் என்று போலீஸ் முடிவு செய்தது.

சாரிங்க கவிதா நீங்களே புருஷன பறி கொடுத்திட்டு தவிக்குறீங்க, உங்களே விசாரணை என்கிற பேர்ல ரொம்ப டிஸ்டார்ப் பண்ணிட்டோம் சாரி.

உங்க புருஷன் மர்டர் கேசுல ஏதாவது துப்பு கிடைச்சா இன்பார்ம் பண்ணுங்க....உங்க போன் நம்பர்ம் கொடுங்க என்றுகேட்டு வாங்கி கொண்டது காவல் துறை.

சில தினங்களுக்கு பிறகு...

கவிதா வெளியே சென்ற நேரம் பார்த்து காவல் துறை அதிகாரி அவள் வீட்டிற்கு வந்தார். வணக்கம் அம்மா, சொல்லுங்க சார்இப்ப தான் பொண்ணு வெளியே போனா சார் அவள கூப்பிடுனாமா, வேண்டாம்மா நாங்க உங்கள பார்க்க தான்வந்தேன். அன்னைக்கு உங்க பொண்ணு போன் நம்பர்ர ஒரு பேப்பர்ல எழுதி கொடுத்தீங்களே அந்த பேப்பரோட மீதிபக்கத்தை தரீங்களாம்மா என்றார் போலீஸ் அதிகாரி.

உங்களுக்கு தராம யாருக்கு சார் தருவேன். எங்க மருமக புள்ள கேசை விசாரிக்கிற போலீஸ் அதிகாரி நீங்க... எங்களுக்காகபாடு படுறீங்க உங்களுக்கு தரமாட்டேனா???அது என் மகளோட கல்லூரி நோட் புக் சார் அதிலிருந்து தான் போன் நம்பர் எழுத பேப்பரை கிழித்தேன் என்றாள் அந்த அம்மா வெள்ளேந்தியாக.

நோட் புக்கை வாங்கி கொண்டு காவல் துறை அதிகாரி காற்றாய் பைக்கில் பறந்தார்.

சில விசாரணைகள் கவிதா நெருங்கிய வட்டாரத்தில் போலீஸ் விசாரித்தது. போலீஸ் எதிர்பார்த்த குற்றவாளிகள் விசாரணையில் வசமாக மாட்டி கொண்டார்கள்.

மறுநாள் செய்தி தாள்களில்...

முரளி என்ற மணமகன் தேனிலவுக்கு சென்ற இடத்தில் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் திடீர் திருப்பம். ஒவ்வொருகுற்றவாளியும் கொலை செய்யும் இடத்தில் ஏதாவது தடயத்தை விட்டு செல்வான் என்பது மாற்றப்படாத விதி. ஆனால், இந்தவழக்கை பொருத்த வரை எந்த துப்பும் போலீஸ்க்கு கிடைக்காத நிலையில் விசாரணையை முடிக்கும் தருவாயில் கொலையாளிக்கு உடந்தையாக

இருந்த பெண்ணின் வீட்டில் கொடுத்த ஒரு துருப்பு சீட்டே கொலைக்கான காரணத்தை அறிய காரணமாய் அமைந்த சுவாரஸ்யம். போலீஸ் விசாரணையில் கொலையாளிகளின் எல்லா வெளி வேஷமும் அம்பலம் ஆனது. கவிதா என்ற மணமகளின் உயிர் தோழி கலை என்பவள் அவள் தோழியின் கணவனை கொடூரமாக அடித்துகொன்றதாக வாக்குமூலம். தங்களுடைய தவறான லெஸ்பியன் செக்ஸ் உறவு முறைக்கு புது மணமகன் தடையாகஇருப்பானோ? என்ற காரணத்திற்க்காக கொன்றதாக காவல் துறையில் வாக்குமூலம்.

கவிதா கொலைக்கு உடந்தையாக இருந்ததால் அவரும் கைது செய்ய பட்டார்.

சார் நீங்க சொல்லுங்க ... எப்படி கொலையாளிகளை கண்டு பிடிச்சீங்க. இந்த கேசு தொடக்கத்தில் இருந்தே கவிதா மேலேசந்தேகம் இருந்தது. ஆனா எந்த வித தடயமும் கிடைக்கலை கடைசியா கவிதா தரப்பு விசாரணையை முடிக்க நினைச்சப்ப அவங்ககிட்டே போன் நம்பர் கேட்டேன். ஒரு ஸீட்ல நம்பர் எழுதி கொடுத்தாங்க. அந்த ஸீட்க்கு பின்னாடி கவிதா வெட்ஸ்கலை, கலை லவ்ஸ் கவிதான்னு ஒரு காதலர்கள் போல ரெண்டு பொண்ணோட பேர் எழுதி இருந்துச்சு. போலீஸ் மூளையிலேஎங்கோ பொறி தட்டுச்சு, அதுக்கப்புறம் கவிதா ஃப்ரெண்ட் கலையை விசாரிக்க வேண்டிய விதத்துல விசாரிச்சோம் எல்லாஉண்மையும் வெளி வந்திடுச்சு. கொலைக்கான காரணம் தமிழ் நாட்டை பொறுத்த வரைக்கும் புதுசா இருக்கலாம் ஆனாஎன்னை பொருத்தவரைக்கும் இது மாதிரியான காரணங்களுக்காக நடத்தப்படும் கொலைகள் நல்லதுக்கு அல்ல. நம்மகிட்டே கல்வி அறிவு தான் வளரனும். கலாச்சாரம் அழிய கூடாது.

நாகரீகம் வளர, வளர நாம்ம எல்லாம் மிருகமா மாறிக்கிட்டே இருக்கோம். இந்த நிலை மாறணும். நாம்ம எல்லாம் மனுசனாஇயற்கைக்கு முரண் இல்லாத கலாச்சாரத்துக்கு உட்பட்ட வாழ்க்கையை வாழ்த்தோம்னா எந்த தப்பும் இந்த பூமியிலே நடக்காது. ■

அரை வட்டம்
முழுமதிப்பெண் கிடைத்தது
பரிட்சை பேப்பரில்

தரிசு நிலத்தைப் பார்த்து
ஓயாமல் கத்துகிறது
கறவை மாடு

துரோகியின் மரணம்
புண்ணியத்தை தேடிக் கொண்டது
சவப்பெட்டி

நடந்து முடிந்த இரவு
சுத்தம் செய்கிறது
காலைப் பனித்துளி

தலைமுழுகிய பின்பும்
துவட்டிவிட்டுச் செல்கிறது
சில நீர்த்துளிகள்

அகலப் பாதை
குறுக்குவழியில் சென்றது
மேச்சல் ஆடு

இந்தியாவின் முதுகெலும்பு
செயலிழந்து கொண்டிருக்கிறது
ஐந்தர் மந்தர்

கோடை வெயில்
குளிர்ச்சியாகவே இருக்கிறது
கோயில் சிலைகள்

- **ஹிசாலி**

சென்னை

மனம் நமக்கு ஆயுதம்

மனச்சாட்சி மனிதத்தின் அத்தாட்சி...

இசைவாசி

அடுத்த உயிரை தன்னுயிர் போலவே எண்ணி எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யா உள்ளத்தினை பெற்ற அனைவரும் கடவுளின் பிரதிபலிப்பு. ஏழாம் அறிவை நோக்கி நகரும் இந்தப் பூமியில் மனித இனத்தின் ஆறாம் அறிவு எது? சிந்திக்கும் அறிவை நாம் ஆறாம் அறிவு என்கிறோம். ஏன் விலங்குகள் சிந்திப்பதில்லையா மனிதனைக் காட்டிலும் விலங்குகள் மனிதாபி நேயத்தோடு சிந்திக்கிறது என்பது வியக்கத்தக்கது. தனக்கு ஆபத்தென தெரிந்தால்தான் தாக்குதலை ஆயுதமாக கையாளுகிறது. ஆனால் மனிதன் மட்டும்தான் கௌரவித்திற்காகச் சக மனிதனை ஏய்க்க நினைக்கிறான். கோபத்தைத் திறக்கிறான்.

விலங்குகளிடமிருந்து கற்றுக் கொள்ள வாழ்வியல் பாடம் இங்கு எவ்வளவுவோ இருக்கிறது. வீட்டில் வாழ வேண்டியதெல்லாம் காட்டில். காட்டில் வாழ வேண்டியதெல்லாம் வீட்டில். விலங்கிற்கும் மனிதனுக்கும் ஒரு வித்தியாசமான முரண்தான் இது. ஒரு விலங்கு இன்னொரு விலங்கின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு நடப்பதை பார்க்கையில் மனிதனை அதனோடு ஒப்பிட்டு காணுகையில் யார் ஆறறிவு படைத்தவர்கள் என்று தெரியவில்லை.

விலங்குகளிடமிருந்து
மனிதர்கள் நல்ல பாடம்
கற்றுக்கொள்கிறார்கள்
மனிதர்களிடம் இருந்தும்தான்...

இசைவாசி

மனிதன் ஒரு சமுதாய விலங்கு என்பான் ஓர் அறிஞன். உண்மையில் விலங்கினத்தின் பரிணாம வளர்ச்சியின் உச்சம் மனிதன். மனிதனுடைய ஆயுள்காலம் முடியும்போது இந்த உலகத்தின் ஆயுள்காலமும் முடிந்து விடவா போய்கிறது. இந்த உலகத்தை, பூமியை அடுத்தவர்களின் வாழிடமாகவும் நாம் எண்ணுதல் வேண்டும்.

கருவாக உருவாகும் போதே நமக்கான உரிமைகள் பிறந்துவிட்டன. பிறருடைய உரிமையும்தான். வாழும் இல்லமாக இருந்தாலும்சரி பணி செய்யும் அலுவலகமாக இருந்தாலும்சரி அங்கு வசிப்பவர்களை அடிமையாக, சொல்வதை கேட்கும் இயந்திரமாக நினைத்து விடுதல் ஆகாது. அவ்வாறு நினைக்கும்போதே பிறருடைய கண்ணீருக்குக் காரணமாகி விடுகிறோம்.

பிறரைப் புரிந்து கொண்டவர்களை அவ்வுலகம் போற்றும். வாழ்த்தும். எந்த விலங்குகளுக்கும் எந்தப் பறவைகளுக்கும் உள்ளுணர்வு இருப்பது உளவியல் உண்மை.

பெண் விலங்கு கர்ப்பமாக இருந்தால் எந்தவொரு ஆண் விலங்கும் அதை நெருங்குவது இல்லை. கடல் குதிரை இனத்தில் ஆண் குதிரைத்தான் காப்பத்தைச் சுமக்கிறது. புறா இனத்தில் ஆண் புறா பெண் புறா சேர்ந்து விட்டால் வேறொரு இணையைத் தேடுவது இல்லை. மயில் வறட்சி காலம் என்று தெரிந்தால் இனப்பெருக்கத்திற்கு இணைவது கிடையாது. கோழி அடைகாக்கும் காலத்தில் சேவலை எதிப்பார்ப்பது கிடையாது. சொல்லப் போனால் எந்த விலங்கும் பறவையும் மனிதனைப் போல எண்ணத்தை வரவழைத்து உடலுறவு கொள்வதில்லை. விலங்குகள் எண்ணம் வரும்போது மட்டுமே தாம்பத்தியத்திற்கு இசைவு தெரிவிக்கிறது.

பூனை தன்னுடைய கழிவுகளை அகற்றி விட்டு அதை மண்ணால் மூடி வைத்துவிடும். சுகாதாரத்திற்கு உதாரணம். தூக்கனாங்குருவி கூட்டின் கட்டிடக்கலையை எந்த பொறியாளனாலும் மிஞ்சிவிட முடியாது. கூட்டில் வெளிச்சம் இருக்க வேண்டி சிறு துண்டான களிமண்ணைக் கூட்டில் வைத்து மின்மினி பூச்சியை அதில் ஒட்ட வைத்துவிடும். இலவம் பஞ்சுகளைச் சேகரித்து அதன்மேல் தன் இணையை உறங்க வைக்கும். இது இல்வாழ்க்கை.

பட்டுப் பூச்சியின் எச்சம் பட்டாக இருக்கிறது. மாட்டுச்சாணம் கிருமி நாசினியாக இருக்கிறது. வீட்டிற்குள் பாம்பு தேள் பூராண் விஷப்பூச்சிகள் வராமலிருக்க இன்னமும் கிராமப் புறங்களில் மாட்டுச் சாணத்தால் வீட்டையும் வாசலையும் சுத்தம் செய்வார்கள்.

சிப்பி கடலில் மிதக்கும்போது அதன் வாய் பகுதி மேல் நோக்கி இருக்கும். மழை நீர் அதில் விழுந்தால் அதை தாங்கி கொண்டு உள்ளே சென்றுவிடும். காலங்கள் பல செல்ல தான் தாங்கிய மழைதுளியை முத்தாக பிரசவித்துவிட்டு இறந்து போகும். யோகாசன முறைகள் கூட விலங்குகளைப் பார்த்துதான் நமது முன்னோர்கள் கற்றுக் கொண்டார்கள் என்ற செய்தி வியக்க செய்கிறது.

**நந்தெறும்பு தூக்கணம் புள்காக்கை என்றிவைபோல்
தம்கருமம் நல்ல கடைபிடித்துத் தங்கருமம்
அப்பெற்றியாக முயல்பவார்க்கு ஆசாரம்
எப்பெற்றி யானும் படும்**

நத்தை தன் உணவைத் தானே சுமக்கும். எறும்பு உணவைச் சேகரித்து பாதுகாப்போடு வாழும். தூக்காங்குருவி தானே இல்லம் அமைத்து தன் குடும்பத்தைக் காக்கும். காக்கை தன் இனத்தோடு ஒற்றுமையைக் கடைபிடிக்கும் இவைபோல நல்லது செய்து வாழ்வோர்க்கு இல்வாழ்க்கையில் நல்லது நடந்து கொண்டே இருக்கும் என்று ஆசாரக்கோவையில் இடம் பெறும் இந்தப் பாடல் விலங்குகளின் குணாதிசயத்தைச் சொல்லி மனிதனை ஒப்பிடுகிறது.

மனிதனைப் பார்த்து பழகி பழகி மனித உள்ளத்தினை பெற்று விட்ட விலங்குகளை நினைக்கும் போதெல்லாம் மனிதனுக்கு இல்லாத நற்குணங்கள் விலங்கின் இடத்தில் இருப்பதை பார்க்கும் போதெல்லாம் 'இறைவா எனக்கு ஐந்தறிவு கொடு' என்று கேட்க தோன்றுகிறது.

**கொத்தித் திரியுமந்தக் கோழி அதைக்
கூட்டி விளையாடு பாப்பா
எத்தித் திருடுமந்தக் காக்காய் அதற்கு
இரக்கப் பட வேணும் பாப்பா
பாலைப் பொழிந்துதரும் பாப்பா அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா
வாலைக் குழைத்துவரும் நாய்தான் அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா
வண்டி இழுக்கும் நல்ல குதிரை நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா**

விலங்கினங்களை மேம்படுத்தி பாப்பாக் களுக்கு விளக்குகிறான் பாரதி.

அதுமட்டுமல்ல கழுதையைக் கொஞ்சி முத்தம் கொடுத்து தனது கருணையை வெளிப்படுத்திவனும் அவனே. “உயிர்கள் எல்லாம் தெய்மன்றிப் பிறவொன் றில்லை” என்று எழுதியவனும் அவனே. “காக்கை குருவிகள் எங்கள் ஜாதி” என அஃறிணை உயிரினங்களை மனித இனத்தோடு சேர்த்தவனும் அவனே. அவனுக்கு இருந்த அஃறிணை பற்று எல்லோருக்கும் இருந்திடல் வேண்டும்.

வாய் இல்லாத ஜீவன் என்று எண்ணி அதற்காகப் பரிதாபப்படும் நமக்கு அதன் உணர்வுகள் பேசுவதையும் தெரிந்து கொள்ள நம் இதயம் ஜீவினத்தோடு இயங்க வேண்டும். ஏழாம் அறிவை நோக்கி செல்லும் ஆறறிவுபடைத்த மனிதனால் வாழ முடியாத நல்ல வாழ்க்கையை ஐந்தறிவு கொண்ட இனங்கள் வாழ்ந்து விடுவதுதான் நமக்குப் பாடமாகும்.

உணவு சுழற்சியில் ஒரு விலங்கு இன்னொரு விலங்கை உண்டு வாழ வேண்டும் என்ற இயல்பான நியதி இங்குண்டு. அதற்காக இதை கருணையற்ற செயல் என்று கூட சொல்ல தோன்றலாம். பசிக்குப் பிறகு சாப்பிடும் உணவு வேறொருவனுடையது என்ற சோஷலிசம் அதற்கு தெரியுமோ என்னவோ பசி தீர்ந்த பிறகு அது வேட்டையாடுவதே இல்லை.

கிணறு தோண்ட இப்போது அதிநவீன இயந்திரங்கள் வந்துவிட்டன. நிலத்தடி நீரைக் கண்டுபிடிக்க இயந்திரத்தின் உதவியை நாடுகிறோம். ஆனால் அறிவியல் வளர்ச்சி இல்லாத காலத்தில் பசுமாட்டைக் காட்டில் மேய விட்டு அது தொடர்ச்சியாக எங்கு படுத்துக் கொண்டு அசைபோடுகிறதோ அங்கு வற்றாத நிலத்தடிநீர் கிடைக்கும் என்று ஒரு விலங்கின் செயலை வைத்து தைரியமாகக் கிணறு தோண்டிய காலமும் உண்டு.

நிலத்தில் வளரும் மரம் செடிகளில் பறவைகளின் நடமாட்டமும் தங்கலும் அதிகமாக நடந்தால் அங்கு புழுக்கள் அதிகமாக இருக்கும் என்றறிந்து அந்நிலத்தை விவசாய நிலமாக உருவாக்கினார்கள் நமது முன்னோர்கள். விவசாய நிலமாக மாற்றுவதற்குமுன் குறிப்பிட்ட குறுகிய நாட்கள் இரவில் சேவலை அந்நிலத்தில் தங்க விட்டு அதிகாலையில் சேவல் கூவும் ஒலியின் வீரியத்தை கணக்கில் கொண்டு அங்கு விவசாயம் நடத்தினார்கள்.

நிலநடுக்கம், பூகம்பம், நிலச்சரிவு, சூறாவளி போன்ற இயற்கை சீற்றங்களை விலங்குகள் சீற்றத்திற்கு முன்னதாகவே உணர்ந்து கொண்டு தன்னையும் தனது இனத்தையும் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் சென்று விடுகிறது. அதெப்படி ஐந்தறிவு விலங்குகளால் உணர்ந்து கொள்ள முடிகிறது. ஏன் ஆறறிவு கொண்ட மனிதர்களால் உனர்ந்து கொள்ள முடிவதில்லை. சாதாரண சக மனிதனைக் கூட புரிந்து கொள்ள முடியாதவர்களை எப்படி ஆறறிவு கொண்டவர்களாகத் தகுதி கொடுக்க முடியும். மனிதம் தன் இயல்பை மீறி நடந்து கொள்கிறதோ என்ற கவலை மனிதர்களை நேசிப்பவர்களிடையே வந்து விட்டது.

தண்ணீரை நோக்கி சென்ற தேளை அதை காப்பாற்ற நினைத்து இரண்டு முறை கையில் எடுத்து வேறொரு இடத்தில் விட்டார் விவேகானந்தர். அந்த இரண்டு முறையும் அவரை கொட்டியது. மூன்றாம்முறை தண்ணீரைப் பார்த்து போன தேளை மீண்டும் காப்பாற்ற அதை எடுக்க சென்றார். கவனித்துக் கொண்டிருந்த சீடன் ஐயா அது உங்களை கொட்டுகிறதே விட்டுவிடலாமே என்றான். தேளின் குணம் கொட்டுவது. என் குணம் அதை

காப்பாற்றுவது என்றாராம் விவேகானந்தர்.

என்னுடைய வலிகளைத் தெரிந்து கொள்கிறேன். அதனால் பிறருடைய வலிகள் தெரிகிறது. மறுத்துப்போன இதயமாக இருந்தால் அதை மறுத்து விடுங்கள். இதயம் மனிதனின் அடையாளம்.

இதயத்தைத் திற
கடவுள் வரட்டும்...

'மக்களுக்காகச் சிந்திப்போம்' ஈரோடு புத்தகத் திருவிழாவை நடத்தும் மக்கள் சிந்தனை பேரவையின் வாசகம் இது. 2015 ஆம் ஆண்டிற்கான புத்தகத் திருவிழாவில் இறையன்பு அவர்கள் 'வனநாயகம்' என்ற தலைப்பில் அற்புதமாகப் பேசினார். பச்சையம் நிறைந்த மரம் காட்டுத் தீயில் முதலில் எரியும். பிறகுதான் மற்ற மரங்களுக்குப் பரவும் என்று அந்தச் சொற்பொழிவில் குறிப்பிட்டார். மரம் கூட அடுத்த மரங்களைக் காக்க நினைத்து முதலில் தன்னை எரித்து கொள்கிறது என்றதும் உடம்பு சிலிர்க்காமல் இருக்குமா?

ஓர் அறிஞன் மேசையின் மீது கத்தியை வைத்துவிட்டு வேறு பணிநிமித்தமாகச் சென்றுவிட்டான். குரங்கு ஒன்று அந்தக் கத்தியை எடுத்து கொண்டு சென்றதை பணியாள் பார்த்து விட்டு அதை அறிஞரிடம் சொல்லியபோது அவர் கேட்டார் எடுத்தது குரங்கு தானே? ஆமாம். பிறகென்ன பயம். மனிதன்தான் கத்தியை எடுக்க கூடாது என்றாராம்.

எந்த விலங்கும்
தேவையற்ற நிலம்
திருடுவதில்லை
கவனி மனிதனே
கூட்டு வாழ்க்கை இன்னும்
குலையாதிருப்பது
காட்டுக்குள்தான்...

'ஐந்து பெரிது ஆறு சிறிது' என்ற தலைப்பில் கவிப்பேரரசு எழுதிய கவிதை வரிகள். மனிதனை மிருகம் என்று கூட சொல்லாதீர்கள் என்றும் அதில் குறிப்பிடுவார்.

இப்படிக்கு என்னிதயம்

விழியோரம் நனைகிறது
இருட்டோடு அழுகிறது
இமை மூடத் துடிக்கிறது
முகநூலைத் திறக்கிறது...

பழைய பறவைகளின்
பாடல்கள்
பசி பிடித்துப் பறக்கிறது
இருதயத்தின் நரம்புகள்
இரத்தமின்றிக் கொதிக்கிறது
இனியேனும் பிறந்திடுமா
ஆறுதல் என்பது...

கடிதங்கள் ஓராயிரம்
புத்தக நடுவில் படுத்துறங்க
பதில்களைப் பாடியழைத்து
காதலைத் தேடி வியர்க்கிறது
விடையற்ற உணர்வுகள்

இனியும் வேண்டுமா வேதனை
இப்படிக்கு என்னிதயம்...

அக்கரைக்குயில்

ஏ எச் ஹிம்லானா

ஆறாம் அறிவைக் காட்டிலும் ஐந்தறிவு சிறந்ததாகும். நல்லதாகும் என்று எண்ண கூடிய அறிவு நிலைக்கு நாம் தள்ளப்படுகிற அளவுக்கு ஆளாகி இருக்கிறோம். மனித உணர்வுகளை நவீன நாகரிக வளர்ச்சி குறுக்கி விட்டதாக சிலர் எண்ணுவது உண்மையாகி விட கூடாது.

'கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசைன, பொறுமை அந்த எருமையை விட பெரிசு, காக்கைக்கு தன் குஞ்சு பொன் குஞ்சு' என்று

மனிதனின் அன்றாட வாழ்க்கை முறைகளை விலங்குகளோடு ஒப்பிட்டு பார்த்து விடுகிறோம்.

என்னை பார் யோகம் வரும். நரி முகத்துல முழிச்சிட்டு போ. காலையில எங்கியாவது போகும் போது பசு மாட்ட பாத்துட்டு போ. ஏன் மனுசன பாத்துட்டு போனா என்ன?

இதுவே யாராவது ஒருவன் முகத்தில் முழிச்சிட்டு போகும் போது காலையங்காட்டியும் அவன் முகத்துல முழிச்சேன் எப்படி உருப்படும். மனுசன பாத்துட்டு போன பதில் இப்படி வருது. எல்லாவற்றிற்கும் விலங்கையே மதிக்கிறோம். மனிதன் விலங்கை விடவும் மதிப்பற்றவனா?

ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
இரண்டறிவதுவே அதனோடு நாவே
மூன்றறிவதுவே அவற்றோர்டு மூக்கே
நான்கறிவதுவே அவற்றோடு கண்ணே
ஐந்தறிவதுவே அவற்றோடு செவியே
ஆறறிவதுவே அவற்றோடு மனனே
நேரிதின் உணர்ந்தோன் நெறிபடு திறனே...

தொல்காப்பியர் உயிர்களின் அறிவு தன்மையை விளக்குகிறார். ஓர் அறிவு உயிரி உடம்பு மட்டும் பெற்றிருக்கும். இரண்டறிவு உயிர் உடம்போடு நாக்கு பெற்றிருக்கும். மூன்றறிவு உயிரி உடம்பு, நாக்கு, மூக்கு பெற்றிருக்கும். நான்கறிவு உயிரி அவற்றோடு கண்ணைப் பெற்றிருக்கும். ஐந்தறிவு உயிரி அவற்றொடு செவியைப் பெற்றிருக்கும். ஆறறிவு உயிரி அவற்றோடு மனதைப் பெற்றிருக்கும். ஆறாவது அறிவு என்பதை அதன் மனதை அடையாளமாக கொண்டு கண்டுபிடிக்கலாம் என்பதுதான் தொல்காப்பியரின் விளக்கம்.

மனிதர்களே ஆறறிவு கொண்டவர்களாக நீங்கள் வாழ வேண்டும் என்றால் மனதோடு வாழ வேண்டும்.

விலங்குகளின் குணம் மாறுவதில்லை
மனிதனின் குணம்தான்
விலங்காக மாறிவிடுகிறது

1

கோடையில்
பரபரப்பாக நடைபெறுகிறது
பம்பர விளையாட்டு

2

ஓடும் காளையை
மடக்கிப் பிடிக்கிறான் சிறுவன்
மூக்கணாங்கயிற்றில் ரேகை

3

எரி மேடைக்குள்ளும்
பிரகாசமாக தெரிகிறது
எலும்புத் துண்டு

4

வேகமான காற்றில்
மெதுவாகவே நகர்கிறது
ஆழ்கடல் அலை

5

கறையான் தின்ற
புத்தகம் காட்டுகிறது
வறுமை நிலை

6

தொட்டில் குழந்தையின்
கரங்களைப் பற்றுகிறேன்
பால் மணம்

7

புத்தனின்
பாதம் ஏறி இறங்குகிறது
புது மழைத் தண்ணீர்

8

களைக்கொத்தின்
கூர்மையான பகுதியில் உறைகிறது
வறுமையின் நிறம்

9

சிறுமியின்
கந்தல் வழி உதிர்கிறது
கிளிஞ்சல்கள்

10

சாய்ந்து கிடக்கும்
சிலையை நிமிர்த்துகிறது
குட்டிக் கரங்கள்

11

மூக்கணாங்கயிற்றிலிருந்து
பிரித்தெடுக்கிறான் சிறுவன்
பம்பரத்திற்கான சாட்டை

12

குவியும் மேகம்
கசியத் துவங்குகிறது
கண்ணீர்

13

மழைக்காலம்
ஓட்டுத்திண்ணை நனைக்கிறது
கண்ணீர்

14

விவசாய நிலத்தில்
உதிர்ந்து கிடக்கிறது
கோவைப் பழம்

15

மூடு பனியில்
கூரையில் நெளிகிறது
இறகுயர்த்தும் சேவல்

16

கடல் நீர்
வீட்டிற்குள் நுழைகிறது
தீர்த்தம்

17

குழந்தையின்
உண்டியல் நிறைக்கிறது
சாமத்து மழை

18

திருவிழா நெரிசலில்
புரட்சி செய்தபடி நிற்கிறது
பலூன் கேட்டு அடம்பிடிக்கும் சிறுமி

19

குடிசைக்குள்ளிருந்து
நட்சத்திரம் பார்க்கிறது குழந்தை
நழுவும் மரப்பாச்சி பொம்மை

20

மின்னல் வெட்டுகையில்
காதை இறுக்கமாக மூடுகிறாள் சிறுமி
குடிசைக்குள் நிசப்தம்

எஸ். நாகலிங்கம்
தென்னம்பூவயல்
தேவகோட்டை

நூல் அறிமுகம்

கவிநுட்ப துளிப்பா

கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகுத்தியே இன்று இலக்கியம் சமைக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. பெருகிவரும் அதிநவீன அறிவியல் உலகில் இளைஞர்கள் தனது வாழ்நாளை இயந்திர உலகில் பணயம் வைக்கின்றனர். அவர்கள் தேனீர் அருந்தும் நேரம், பயண நேரங்களில் ஹைக்கூ கவிதைகள் மற்றும் துளிப்பாக்களையே விரும்பிப் படிக்கின்றனர்.

நம் அன்றாட வாழ்வில் இடம் பெற்றிருக்கும் நிகழ்வுகளை நேர்த்தியாய் ஒப்பனைகள், கற்பனைகள் ஏதுமின்றி மூன்று வரிகளில் ஒரு மின்னலைப்போல் உணர்த்திவிட்டுப் போகிறது ஹைக்கூ கவிதைகள்

ஜப்பானிய விதிப்படி 5,7,5 கொண்டது என்றாலும் தமிழில் வார்த்தைச் சுருக்கமுடன் வியப்பையும் அதிர்வையும் வெளிப்படுத்தும் ஹைக்கூ கவிதைகளே பலராலும் எழுதப்படுகின்றன. ஜப்பானிய இலக்கண வரம்புகளை உடைத்தெறிந்து எழுதப்பட்ட பல தமிழ் ஹைக்கூ கவிதைகள் காலத்தை வெல்லும் ஹைக்கூ கவிதைகளாக விளங்குகின்றன.

இயற்கையுடன் இயைந்த வாழ்வு, உலகின் பருவ நிலைகள், சமூக சிந்தனைகள், அவலம், மனிதநேயம், அரசியல், பொருளாதாரம் என தமிழ் ஹைக்கூ கவிதைகளை எழுதும் இளைய கவிஞர்கள் பலர் இந்த ஹைக்கூ நூற்றாண்டில் தடம் பதித்து வருகின்றனர். இயற்கையைப் பற்றி பல ஹைக்கூ கவிதைகள் ஆயிரக்கணக்கில் எழுதப்பட்டு வருகிறது.. இருப்பினும் தற்கால சூழலில் தமிழ் ஹைக்கூ கவிதைகள் பெரும்பாலும் முற்போக்கு எண்ணங்களையும், சமூக அவலங்களையும் காட்சிப்படுத்துவது ஏற்புடையதாகவே உள்ளன.

இந்த "கவிநுட்ப துளிப்பா" நுட்பமாய் நமக்கு வாழ்வின் வகைமைகளைத் தெளிவுறுத்துகிறது.

மூன்று வரியில் சமூக அவலங்களை நறுக்குத் தெரித்தாற்போல் கூறுகின்ற ஹைக்கூ கவிதைகள் பன்முகப் பொருளோடு மண்சார்ந்த அவலங்களைக் கூறுவதில் வலிமைமிக்க படைப்பாக உள்ளன.

"காக்கையின் கூடு
காற்றடித்ததும் விழுகிறது
குயிலின் இறகு" (பக்கம் எண்: 53)

கவிஞர் கவிநுட்பம் அவர்கள் இந்தக் கவிதையை ஒரு வாழ்வியலின் தன்மையை தொன்றுதொட்ட இயற்கையின் வடிவில் நமக்குத் தருகிறார். கூடு கட்ட முடியாத குயிலின் வாழ்வில் காக்கையின் கூடு அங்கம் வகிப்பதை அழகாகக் கூறுகிறார்.

தனது காக்கையின் குஞ்சுகளோடு குயிலின் குஞ்சுகளையும் வளர்க்கும் அந்தக் காக்கையின் கூட்டிலிருந்து காற்றடிக்கும் போது குயிலின் இறகொன்று விழுகிறது என்று அந்தக் காட்சியைப் படம் பிடித்துக் கூறும் இந்த ஹைக்கூ

அனைவரின் எண்ணத்தையும் ஈர்க்கிறது. இந்த ஹைக்கூவைப் படிக்கும் போது நான் எழுதிய ஹைக்கூ ஒன்று நினைவுக்கு வருகிறது :

“காக்கையின் கூட்டில்
குயில் குஞ்சுகள்...
அடக்கி வாசித்தன ! (கா.ந.கல்யாணசுந்தரம்)

எதையுமே நல்லதொரு அணுகுமுறை ஆனந்தத்தை தரும். துன்ப சூழலை நல்கும் நிகழ்விலும் மனம் மகிழும் கவிஞர்...

“ரோஜா பறித்தேன்
முத்தம் தந்தன
முட்கள்“ (பக்கம் எண்: 37)

ரோஜா மலர்களைப் பறிக்கும் நேரத்தில் முட்கள் கையைக் குத்துகின்றன... சில நேரங்களில் ரத்தமும் வரும். ஆனால் இந்த நிகழ்வை ஆனந்தமான அணுகுமுறையும் அனுபவித்தலையும்

“முத்தம் தந்தன முட்கள் “ என முத்தாய்ப்பாய் மூன்றாவது அடியைத் தருகிறார் கவிஞர் கவிநுட்பம். இவரது மென்மையான மனம் இங்கே பிரதிபலிக்கிறது.

மானுட வாழ்வென்றாலே அவலம் நிறைந்ததுதானே..! ஒரு ஹைக்கூ கவிதை என்பது வாழ்வியல் தத்துவங்களை கூறுகிறது என்றால் அதை எழுதும் கவிஞரின் சூழலில் அவர் வாழும் பகுதியிலும் அவலம் உள்ளது என்றுதான் கொள்ள வேண்டும். சூழலை கவிதையில் கொண்டுவந்தால்தான் கவிஞர். அதுவும் வாழும் பகுதியின் இயற்கையின் எழிலையும் அதை ஒட்டிய வாழ்க்கை முறையையும் தமது ஹைக்கூ கவிதையில் கொண்டு வருதலே சிறப்பு.

“வாய்க்கால் நீரில்
உப்புச்சுவை வடிந்தது !
ஏழையின் வியர்வை” (பக்கம் எண்: 25)

ஒரு ஏழை விவசாயக் கூலியை இங்கே படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

■ புல்லாங்குழல் இசையில்
வலி மறக்கின்றன
வனத்தில் எஞ்சிய மூங்கில்கள் .

■ சற்றே உப்புக்குறைவு
சலித்துக் கொண்டன
தொட்டி மீன்கள் .

■ கடல் வற்றிவிட்டது
கவலைப்பட்டன
கண்ணாடிக்குள் மீன்கள் .

■ சீரான இடைவெளியில்
வெளிச்சத் தீவுகள்
நகராட்சி விளக்குகள்

■ வெளிறிய வெளிச்சம்
கோவில் குழல் விளக்கு
உபயதாரர் பெயர் .

■ மரத்தின் நிழல்
இளைப்பாறுகிறது
மரம் தரும் நிழலில் .

■ பேராற்றின் பேரிரைச்சலில்
அமுங்கித்தான் போகின்றன
கூழாங்கற்களின் விசும்பல்கள் .

■ மழைத்துளி பட்டதும்
மலர்ந்து விரிந்தது
வற்றிய குளம் .

■ அந்த முருங்கை மரத்தின்
எந்த இலை சிலிர்க்கிறது
கம்பளிப்பூச்சி ஊர்கையில் ?

■ பற்றிப் படர்ந்த கொடிகள்
வலி உணர்ந்தன
மரத்தின் இலைகள் .

சுப்ரா

ஜாதி, மதம், இனம் மற்றும் மொழி கடந்ததுதான் காதல். சமுதாயம் இதனை அங்கீகரிக்காமல் சாதீய ஆணவக் கொலைகள் நடைபெறுவது இப்போதெல்லாம் அதிகரிக்கிறது. இதையே கவிஞர்....

"காதலியைத் தேடினான்
கிடைத்த இடம்
கல்லறை" (பக்கம் எண்: 50)

என்று அவல வாழ்வின் எல்லைகளைத் தொடுகிறார் தனது ஹைகூவில்.

சுற்றுச் சூழல் பாதிப்புக்கு உள்ளாகும் நகர வாழ்வு நரக வாழ்வாகிப் போனது. வெள்ளம் சூழ்ந்து வடிந்த நகரெங்கும் நெகிழிப்பைகளின் குவியல்கல்களை காணாமல் இருக்க முடியாது. இதனை தனது ஹைகூவில்

"வெள்ளநீர்வடிந்தது
தெருவெங்கும்முளைத்தன
நெகிழிப்பைகள் "(பக்கம் எண்: 49)

... என ரதத்தின சுருக்கமாக நாம் செய்யும் சுற்றுச் சூழல் கேட்டினை இடித்துரைக்கிறார் கவிநுட்பம்.

எதிர்காலத்தில் பூமியின் மேல் மரங்கள் இருக்குமா என்பது சந்தேகமாக இருக்கிறது என்று உணரும் கவிஞர் ....

"மரத்தின் படம்
கொத்திப்பார்க்கிறது
மரங்கொத்தி " (பக்கம் எண்: 28)

... இப்படி நுட்பமாக நமக்கு அறிவுறுத்துகிறார். மரமின்றிப் போனதால் மரங்கொத்தி ஒரு மரத்தின் படத்தின் மேல் அமர்ந்து கொத்திப் பார்க்கிறது எனச் சொல்கிறார். என்னே சூழல் இல்லா வாழ்வின் அவலம் !

ஒரு முதிர்கன்னியின் அவலத்தை இப்படிச் சொல்லாமல் எப்படிச் சொல்வது என்று சொல்லும் கவிஞர் கவிநுட்பத்தின் ஆற்றல் இங்கே வெளிப்படுகிறது

"சீதன அதிகரிப்பு
கூட்டிச் செல்கிறது
பெண்ணின் வயது" (பக்கம் எண்: 34)

சீதனங்களின் அதிகரிப்பு பெண்ணை மணமுடித்து கூட்டிச்செல்லாமல் அவளின் வயதை மட்டுமே கூட்டுகிறது என்று மூவரியில் சொன்னது சமூக அவலத்தின் உச்சமாக உள்ளது.

கவிநுட்ப துளிப்பாக்களைப் படிக்கும் போது மழலை இன்பம், இயற்கை, காதல், வாழ்வியல், சமூக அவலம் என அனைத்து நிலைகளையும் இங்கே ஹைக்கூ வரிகளில் அள்ளித் தெளிக்கப் பட்டுள்ளது. எதை விடுவது எதை எடுப்பது என நமக்கே தடுமாறுகிறது. தமிழ் ஹைக்கூ கவிதைகளின் நூற்றாண்டு கொண்டாடும் தருணத்தில் ஹைக்கூ தொகுப்பொன்றை அழகாகக் கொடுத்துள்ளார் கவிதாயினி கவிநுட்பம் அவர்கள். அவருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள். தமிழ் நெஞ்சம் பதிப்பக வழி சிறப்பாக வெளியிடப்பட்ட இந்நூல் மிகச் சிறப்பாக இருக்கிறது. அவரது முதல் தொகுப்பு என்பதால் சில ஹைக்கூ கவிதைகள் வார்த்தை சுருக்கமின்றி இருந்தாலும் நம் மனதில் நல்ல சிந்தனையை மலரவிட்டுச் செல்கிறது. வாருங்கள் கவிநுட்ப வரிகளில் நம்மை நாம் மறப்போம் !

கா. ந. கல்யாணசுந்தரம்

தொடர்புகளுக்கு:

கவிநுட்பம் பாயிஸா நௌபல்
ஆலிம் வீதி, மீராவோடை- 4, ஓட்டமாவடி,
மட்டக்களப்பு - இலங்கை
email : faishanaufal2016@gmail.com

குழாய் அடி பெண்களிடம்
பீறிட்டு வந்தது
பைந்தமிழ் ...

பூர்ணிமா பார்த்தசாரதி

துளிப்பா நூற்றாண்டில்

துளிப்பா இலக்கிய வகைமைகளும் புதிய துளிப்பா கலப்பினமும்

ஓர் அறிமுகம்

நிப்பானிய துளிப்பா(ஐக்கூ) வகைகள்

ஐக்கூ.	துளிப்பா
சென்ரியூ	நகைத் துளிப்பா
லிமரைக்கூ	இயைபுத் துளிப்பா
ஐப்புன்	உரைத்துளிப்பா
ஐக்கா	ஓவியத்துளிப்பா

புதியதாக கலப்பின துளிப்பா வகைமைகள்

01) இயைபு நகைத் துளிப்பா

லிமரைக்கூ + சென்ரியூ= லிமர் சென்

02) இயைபு ஓவியத் துளிப்பா

லிமரைக்கூ+ ஐக்கா = லிமர் கா

03)இயைபு உரைத் துளிப்பா

லிமரைக்கூ+ ஐப்புன் = லிமர் புன்

04) நகைஉரைத்துளிப்பா

சென்ரியூ+ ஐப்புன் = சென் புன்

05)நகை ஓவியத் துளிப்பா

சென்ரியூ+ ஐக்கா = சென் கா

ஐக்கா என்பது ஓவியத் துளிப்பா
ஓவியம் இன்றி ஒளிப்படத்திற்கு துளிப்பா புது வகைமைகள் இங்கே
அறிமுகம்
01) ஒளித் துளிப்பா
02) ஒளி நகைத் துளிப்பா
03) ஒளி இயைபுத் துளிப்பா
04) ஒளி உரைத் துளிப்பா

ஐப்புன் என்பது உரைத் துளிப்பா
உரையின்றி மரபுப்பா, புதுப்பாவிற்கு
புதிய வகைமை

01) பாத் துளிப்பா
02) பா நகைத் துளிப்பா
03) பா இயைபுத் துளிப்பா
04) பா ஒளித் துளிப்பா

துளிப்பா சூத்திரங்கள்

01/
துளிப்பா
அ)ஐந்தேழ் ஐந்தசை
மூவடி யாவன
துளிப்பா அளவென்ப
ஆ)முந்திய ஐந்தசை
இடையசை ஏழாகி
பிந்திய ஐந்தசை துளிப்பாவே

02/
நகைத் துளிப்பா
மூவடிச் சிந்தனை
நகையென அமைந்திடில்
நகைத் துளிப்பா வாகுமே

03/
இயைபுத் துளிப்பா
முதலடி கடையடி இறுதி
இயல்பாயி ருப்பதென்பது
இயைபுத் துளிப்பா வென்க

04/
ஓவியத் துளிப்பா
துளிப்பாவோடு ஓவியமும்
ஒளியென மின்னிடில்
ஓவியத் துளிப்பா வாகுமே

05/
உரைத் துளிப்பா
உரையோடு இறுஉதியில்
துளிப்பா அமைவது
உரரைத்துளிப்பபா வென்க

புதிய கலப்பின துளிப்பா வகைமை
சூத்திரங்கள்
01#
இயைபு நகைத் துளிப்பா(லிமர்சென்)
இயைபினில் நகைப்பும்
இரண்டறக் கலப்பது
இயைபுநகைத் துளிப்பா வாகுமே

02#
இயைபு ஓவியத் துளிப்பா(லிமர் கா)
இயயைபினில் ஓவியமும்
இணைந்திருப்ப தென்பது
இயைபு ஓவியத் துளிப்பா வென்க

03#
நகை ஓவியத் துளிப்பா(சென் கா)
நகைப்போடு ஓவியமும்
நன்றிணைந் திருப்பது
நகைஓவியத் துளிப்பா வாகுமே

04#
நகை உரைத்துளிப்பா(சென் புன்)
நகைப்போடு உரையும்
நளினமாய் இணைந்ததே
நகைஉரைத் துளிப்பா வாகுமே

05#
உரை ஓவியத் துளிப்பா(புன் கா)
உரையோடு ஓவியமும்
உடனிருப்ப தென்பது
உரைஓவியத் துளிப்பா வென்க

06#
பாத் துளிப்பா
மரபுப்பா புதுப்பாவோடு
இறுதியில் துளிப்பாவானால்
பாத்துளிப்பா வாகுமே

07#
ஒளித் துளிப்பா
துளிப்பாவோடு ஒளிப்படமும்
பளிரென மின்னிடில்
ஒளித்துளிப்பா வாகுமே

புதுச்சேரி யில் 16.10.1916இல் பாரதி
துளிப்பாவிற்கு வித்திட்டான்
அதற்கு நூற்றாண்டு

இந்த புதியதுளிப்பா வகைமையும் புதுச்சேரி
மண்ணில் தான் அறிமுகப்படுத்தப்
படுகிறது

புதுவைத்தமிழ்நெஞ்சன் எழுதிய
துளிப்பா இலக்கணம் என்ற தொடரில்
இதனின் விரிவாக்கம் படிக்கலாம்

புதுவைத் தமிழ்நெஞ்சன்

கர்வம் பொங்குது
மகள் உச்சிதனை முகர்ந்தேன்
மதுர மல்லி

சாலை ஓரம் மரங்கள்
நட்டான் சாம்ராட் அசோகன்
சரித்திரமானது மரம் நடுதல்

மாணவன் படிக்கிறான்
தெரு விளக்கு ஒளியில்
பட சுவரொட்டி

சூறாவளியில் சிக்கியது
விடியலில் கரை ஒதுங்குது
வலம்புரி சங்கு

வேகமாய் ஓடும் ஆறு
கரையில் மெதுவாய் நகர்கிறது
நாயின் சடலம்

ஹேமலதா

சோறூட்டும் தாய்
சிலநேரம் ஒளிந்து விளையாடும்
மேகத்தினுள் நிலா !

வெயில் கவிதை
வாசித்துக் கொண்டிருக்கிறேன்
நிழலில் அமர்ந்து !

பூத்துக் கிடக்கின்றன
கிளைகளின் நிழலில்...
உதிர்ந்த பூக்கள் !

வறண்ட ஆறு
செழித்து வளர்கிறது
நெய்வேலி காட்டாமணக்கு !

சப்பிய பனங்கொட்டை
நினைவுக்கு வருகிறது
தாத்தாவின் நரைதாடி !

அறுவடை நாள்
தூற்றுகிறான் உழவன்
மழையை !

வகைவகையாய் மரங்கள்
மகிழவில்லை மனம்
மரம் அறுக்கும் ஆலை !

சீவி முடித்ததும்
தலை கவிழத்தொடங்கியது
பென்சில் !

கனம் ஏற ஏற
தலை கவிழத் தொடங்கியது
நெற்கதிர் !

சிறுமி வாங்கிய முறுக்கு
சுவைத்துச் சாப்பிட்டமகிழ்ச்சி
நிரந்தரம்

மகிழ்நன் மறைக்காடு

ஆசிர்வாதம் செய்தே
அலுத்துப் போய் விடுகிறது
கோயில் யானை

கூட்டிப் பெருக்கி
களைத்துப் போகிறார்
பள்ளிக்கூட ஆயா...

ஓடாத கடிகாரம் வாங்க
வரிசையில் பிள்ளைகள்
மிட்டாய்க் காரரிடம்..

இரவு தூக்கம் வராமலிருக்க
மாத்திரை கேட்கிறார்
காவல் காரர்..

நீண்ட நடைப்பயிற்சி
சிறிதும் சுணங்கவில்லை
நாய்க்குட்டி..

மதுரா

மகிழ்ச்சி நிரந்தரம்
ஊதியே இல்லை
கடைசி பலூன்.

காய்ந்து போன பயிரில்
பற்றி எரிய தொடங்கியது
வறுமை.

கரையேறவில்லை
தாகம் சுமக்கும்
உழவு மாடுகள்.

பசுமையான செடி
காய்கிறது
வேரடி மண்.

மெல்ல மரத்தில் அமரும்
பறவையின் வானம்
கிளைகளற்றது.

க.ராஜகுமாரன்
வேதைமருதூர்

கோடை விடுமுறை
கூடிக்கொண்டே போகிறது
பள்ளியில் குப்பை

கொட்டியது மழை
சிறுக சிறுக சேர்கிறது
நிறுத்தத்தில் கூட்டம்

வரதட்சணை கொடுமை
தடுத்து நிறுத்தப்பட்டது
குழந்தை திருமணம்

கோடை வெயில்
அதிகமாக இருக்கிறது
தண்ணீர் தட்டுப்பாடு

கருத்த மேக மூட்டம்
அதிகமாகவே இருக்கிறது
புழுக்கம்

கவிஞர் பாண்டிய ராஜ்
திருப்பூர் 641 602

தோட்டமில்லா இல்லத்தில்
சிறகசைத்துத் திரிகிறாள்
பட்டாம்பூச்சியாய் மகள்.

வார்த்தைகளுடன் முட்டி
மோதினேன்
வழுக்கி விழுந்துவிட்டது
கவிதை.

கொதிக்கும் கடற்கரை மணலில்
பூத்திருக்கும் பாலைப்பூ
உன் பாதச்சுவடு.

ஆறு தன்னைத்
திறந்து வைத்திருக்கிறது
ஒரு பாலையாக.

அ.வான்மதி

சுற்றி வந்து
முகம் பார்த்துக்கொள்கிறது வண்டு
பூவில் பனித்துளி.

கவிழ்ந்து கிடக்கும்
தேநீர்க்கோப்பையை உதைக்கிறேன்
வெளியேறுகிறது எறும்பு.

மரநிழலை தேடியலையும்
சிறுமியின் கையில்
பென்சில்.

உதிரும் இலைகள்
சாலையில்
மரக்கிளைகளின் நிழல்.

குழாயடியில் குழந்தை
துள்ளிக் குதிக்கிறது
ஒழுகும் நீர்த்துளி.

செவ்வாயில் நீராதாரம் கிடைக்குமா
ஆராய்ச்சியில்
காகித ராக்கெட்.

மகளின் கிறுக்கல்கள்
பத்திரமாக வைத்திருக்கிறேன்
இதழில் கவிதைகள்.

கூட்ட நெரிசல்
அன்னதான பொட்டலத்தில்
அமைதிப்பிரசாரம்.

கயிறு வித்தை
விழும் ரூபாய் நோட்டின்கீழ்
சிறுமியின் நிழல்•

பட்டாம்பூச்சி பற்றிய
கவிதை எழுதிக்கொண்டிருக்கிறேன்
கால்களில் சுற்றும் பட்டுநூல்.

பானால். சாயிராம்.

தென்னம் ஈர்க்கில்
விளையாட்டுக்காய்ச் சுருக்கு
சாகும் ஓணான்

நிர்வாணம்
ஓடி ஒளியும்
மின்னல்

உதிர்ந்து விழும்
வெள்ளி மலர்கள்
பாதம் சுடும் கோடை

எல்லார் வீட்டிலும் கிடாவெட்டு
பார்க்க பார்க்க கோபமாய்...
தலையாட்டாமல் நின்றிருக்கும் ஆடு

ஆண்டு கூடுமா? குறையுமா?
பழங்களுக்கு மத்தியில்
கண்ணாடியில் முகம்

நிரந்தரமாகத் தங்கிவிடக்கூடாதா?
என் வீட்டுத் தோட்டத்தில்...
அந்தக் குயில்

அடுத்த முறை குறிஞ்சியைப்
பார்க்க முடியாது; ஒரு பூவை
பத்திரப்படுத்திக் கொண்டேன்

என் உயிரை
ஒளித்து வைத்துவிட்டேன்
ஆமையின் ஓடுக்குள்

- முனைவர் ம.ரமேஷ்

இவ்விதழின் முன் பக்கங்களில் இடம் பெற்றுள்ள

ஹைக்கூ கற்க ...
ஹைக்கூவில் பருவ காலங்கள்
சென்ரியு இலக்கணம்
ஹைபுன் இலக்கணம்
பழமொன்ரியு இலக்கணம்

இவ்வாக்கங்களை
https://www.facebook.com/groups/haikusenryuworld/
இவ்விணையத்தில் காணலாம்.



சண்டிலிப்பாய் சுரேஷ்

கவிதைகள்

குடிசை

குடிசை வீட்டுகாரி
தன் காதலை முலையிலேயே
கிள்ளி எறிகிறாள்
காரணம்
இப்போது காதலன்கள்
காதலி வீட்டை தான்
அதிகம் சுற்றுகிறார்கள் !

▶

புத்துமண்
வெட்டியே - என்
குடிசையை கட்டி மெழுகினேன்
அதுதான் கறையான்கள்
கோபம் கொண்டுவிட்டதோ....?
என் கூரை ஓலையை
கொஞ்சம் கொஞ்சமாய்
தின்று கொண்டிருக்கின்றன!

▶

எல்லோருக்கும்
அழைப்பு விடுக்கிறேன்...
என் குடிசைக்கு
ஒருமுறை வாருங்கள்!
உங்களை வரவேற்க
வரவேற்பரையில்லை
உங்களை உட்கார வைக்க
ஆசனங்களில்லை
ஆனால்
வரவேற்கவும்
உட்கார வைக்கவும்
பலரிடமுமில்லாத
மனசு என்னிடம்
இருக்கிறது!

வாடும் காவேரி

கலக்கத்தில வாடுறேன்
கண்ணீருல தவிக்கிறேன்
காப்பாற்ற யார் வருவா?
கரையில நின்னு புலம்பறேன்!

பொறந்த வீடு(கர்நாடகா) வேணுமா?
புகுந்த வீடு (தமிழ்நாடு) வேணுமா?
பொண்ணுக்கு எந்த வீடு?
சொந்தமுன்னு சொல்லுவாங்க??

பொறந்த வீடு மொரடன்தான்
புகுந்த வீடு சாதுதான். ஆனாலும்,
பொண்ணுக்கு புகுந்த வீடு தானுங்க
குடும்பம் உயரனும்னா பொண்ணுதான முக்கியம்!
பொண்ண கட்டிப் போட்டா எந்தக் குடும்பம் உயர்ந்திடும்?

மாங்கா திங்கள மசக்கையா நானில்ல! ஆனாலும்,
பலலெட்சம் (விவசாயி) குழந்தை இருக்கு எனக்கு!!
புருசங்காரன் வயலும் வாடி நிக்கிறான் நிதமும்!!

என்னக் காணாமல் குழந்தையோடு தவிக்கிறான்!
பருவம் வந்தப் பொண்ண பாதுகாப்பது தப்பில்லை
கட்டிக் கொடுத்து புட்டா காவேரி உனக்கில்ல!

வாழப்போற பொண்ணதான் வாழ்த்தி அனுப்பனுமே
வாழ விடாது வச்சு லாபமென்ன?
உணர்ந்து விட்டா உடனே என்னை அனுப்பிடு!
என் உறவுகளோடு நான் சேற வழிய ஒன்னு காட்டிடு!!

ஜீவிதா அரசி